விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 08 திங்கட்கிழமை (21.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 033

# தமிழர்களும் தமிழ்க் கலாசாரமும்
# இலங்கையில் அழிக்கப்படுகின்றன

## சென்னையிலிருந்து டில்லிக்குக் கடிதம்



(சென்னை)

இலங்கையில் தமிழர்களையும், தமிழ் கலாசாரத்தையும் அழிக்க நடைபெறும் முயற்சிகளை தடுத்து நிறுத்தக் கோரி தி.மு.க தலைவர் கருணாநிதி, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும், காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கும் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சி எதிர்ப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் மீது பல தரப்பினரும் தற்போது பாரிய எதிர்ப்புக்களை காட்டி வருகின்றனர். அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடே இதற்கான காரணம் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

தொடங்கஸ்லந்த பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண அமைச்சரினால் ஊடகங்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

ஊடகங்கள் உரிய முறையில் அறிக்கையிடா விடின் முன்னாள் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு நடந்ததே ஊடகங்களுக்கும் நடக்கும் என்று மேல்மாகாணசபை அமைச்சர் உபாலி கொடிக்கார தெரிவித்தார்.

கோட்டாவ தர்மபால வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடந்து உரையாற்றுகையில், இந்த பாடசாலையில் ஆரம்ப பிரிவை நிறுவுவதற்காக எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஒரு சிறு பிரிவினர் தங்களுடைய எதிர்ப்பினை தெரிவிக்கின்றனர்.

அவ்வாறானவர்களுக்கு ஆதரவாக எழுதுகின்ற ஊடகவியலாளர்கள் உண்மையை மறைத்து விடுகின்றனர். விபரங்களை தேடியறிந்து அறிக்கையிடவும் இல்லையேல் ஷிராணி பண்டார நாயக்காவுக்கு நடந்ததே அவர்களுக்கும் நடக்கும் என்றார். (எ-11)

## முஸ்லிம்களுக்கு எதிராக வலுப்பெறும் குரோதம்
### அமைச்சர் ஹக்கீம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

முஸ்லிம் மக்களுக்கு எதிரான குரோதச் செயற்பாடுகள் கண்டிக்கப்பட வேண்டும் என நீதியமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சில பௌத்த பிக்குகள் முஸ்லிம் மக்களுக்கு எதிராக செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

முஸ்லிம்களுக்கு எதிராக மஹரகமவில் நடைபெற்ற போராட்டத்தை தடுத்து நிறுத்த காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கத் தவறியமை வருத்தமளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மஹரகம பிரதேசத்தில் தனியார் ஆடை விற்பனை

(20ஆம் பக்கம் பார்க்க)


## அமைச்சர் பீரிஸ் இன்று இந்தியா பயணம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ் இன்று திங்கட்கிழமை இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியாவில் இன்று திங்கட் கிழமை நடைபெறவுள்ள இந்திய-இலங்கை கூட்டு ஆணைக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் முகமாகவே அவர் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக பி.ரி.ஐ.செய்திச் சேவை தெரிவித்துள்ளது. (எ-11)

## மனிதவுரிமை பேரவை தீர்மானத்திற்கு எந்த நடவடிக்கைகளும் இல்லை!
### குற்றஞ்சாட்டுகிறது கூட்டமைப்பு



(கொழும்பு)

2012-ம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை கூட்டத்தில் இலங்கை அரசாங்கத்திடம் பரிந்துரைக்கப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் விசுவாசமாக முயற்சிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சாட்டுகின்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் சி.மூ.இராசமாணிக்கத்தின் நூற்றாண்டுதின நிகழ்வு மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து

(20ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய மாநாடு திட்டமிட்டபடி நடக்கும்
### அரசு நம்பிக்கை

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு திட்டமிட்டவாறு கொழும்பில் நடத்தப்படும் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் மாநாடு திட்டமிட்டவாறு நவம்பர் 15-ம் திகதி முதல் 17-ம் திகதி வரை இலங்கையில் நடைபெறவுள்ளது.

எந்தத் தடைகள் வரினும் திட்டமிடப்பட்டவாறு நவம்பர் மாதம் நடைபெறும் எனவும் அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு தொடர்பில் கனடா மட்டுமே கேள்வி எழுப்பியுள்ளது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஏனைய உறுப்பு நாடுகள் இலங்கையில் மாநாடு நடத்தப்படுவதற்கு எதிர்ப்பை மாத்திரமே வெளியிட்டுள்ளன.

எனினும் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். யுவதியின் சடலம் விசுவமடுவில் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த இளம்யுவதியொருவர் விசுவமடுப் பகுதியில் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

விசுவமடு 12-ம் கட்டைச் சந்திக்கு அருகில் உள்ள ஆட்களற்ற வெற்றுக் காணி ஒன்றிலிருந்தே இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஆவரங்காலைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் பானுஜா (வயது-22) என வன்னியிலுள்ள அவரது உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அங்கு சென்ற இவரது பெற்றோரும் சடலத்தை இனங்காட்டியுள்ளனர்.

குறித்த யுவதி கடந்த வெள்ளிக்கிழமையன்று தனது வீட்டிலிருந்து விசுவமடு விலுள்ள உறவினர் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழவு இயந்திரம் விற்பனைக்கு

NPJD XXXX இலக்கமுடைய உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0779491178
0756580106

(5547)


# வண். ஐயனார் கோவிலடியில் ஆயுத முனையில் கொள்ளை

வீட்டின் பின்புறமாக உள்ள ஓட்டினைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் அங்கு ஆயுத முனையில் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் வண். வடமேற்கு ஐயனார் கோவிலடி பிஸ்கால் ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது.

இதில் வீட்டின் உரிமையாளரான மார்க்கண்டு பொன்னம்பலம் (வயது74) என்பவர் கையில் வெட்டுக் காயத்திற்கு உள்ளான நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இக்கொள்ளைச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் வீட்டின் பின்புறமாக ஓட்டினைப்பிரித்து கூரிய ஆயுதங்களுடன் உள்நுழைந்த நான்கு திருடர்கள் வீட்டின் உரிமையாளரான மார்க்கண்டு பொன்னம்பலத்தினை வாளினால் கையினை வெட்டிவிட்டு அவரையும் அவரது மனைவியும் கை, கால், வாயினை கட்டிவிட்டு வீட்டில் தேடுதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது அருகில் உள்ள கோயிலுக்கு நேர்த்திக்காக வைத்திருந்த இரண்டு பவுணிலால் ஆன சிலையையும் அவரது மனைவியினது இரண்டு பவுன் தோட்டினையும் கொள்ளையர்கள் அபகரித்து சென்றுள்ளனர். வீட்டில் ஏனைய தங்க நகைகள், பணம் இல்லையா என வீட்டின் உரிமையாளரையும் அவர்கள் மிரட்டியுள்ளனர்.

வீட்டில் தேடுதலின்போது எதுவும் சிக்காததால் இவர்கள் சத்தம் போடுவது வெளியில் கேட்கக் கூடாது என்பதற்காக தொலைக்காட்சி ஒலியையும் அதிகரித்து.விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

திருடர்கள் சென்றபின் அருகில் உள்ள வீட்டாரின் உதவியுடன் வெட்டுக்காயத்திற்குள்ளான வீட்டின் உரிமையாளர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.(எ-11)

# பஸ் மோதி முதியவர் காயம்

வட பிராந்திய போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் துவிச்சக்கர வண்டியும் விபத்துக்குள்ளானதில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை 6.50 மணியளவில் ஆரியகுளம் சந்தியருகே இடம்பெற்றுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் சீனியர் வீதியைச் சேர்ந்த யூ.துரைசிங்கம் (வயது- 62) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிசிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணப்பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ-11)





## பிள்ளையார் இன்

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

25% கழிவு

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)

(C-1660) தொடர்புகளுக்கு: இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

### Course Length - Six Month

24

2013 January- 2013 June

தமிழ் மொழி மூலம்

- Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
- Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
- Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
- Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
- Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
- Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
- Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology. M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

(சி/2190) விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2013


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் வேலுப்பிள்ளை ஜெயரட்ணம்



கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆசிரியை திருமதி அ.துளசி அவர்களது அன்புத் தந்தை வேலுப்பிள்ளை ஜெயரட்ணம் அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி

(5548)


## Access Skills Scholarship Programme
## 400 Scholarships Island-wide

Access Engineering

SKILLS FOR SUCCESS · JOBS Work-focused Development · Microsoft Unlimited Potential · HIBT Path Towards Success

*Access Engineering PLC and Skills for Success (PVT) Limited have joined together to provide Microsoft Unlimited Potential Partnership (UPP) Skills Development curricula for Agriculture, Apparel, Hotel & Tourism and Construction sectors to deserving young people island-wide to acquire the much needed skills to better their career prospects and become active citizens of the country.*

Course Fee (per student):

Total course fee - Rs. 8,000.00
Registration fee - Rs. 200.00
Selected student has to pay - Rs.2,000.00 + Registration fee

(C-2193)

Duration of the course :

60 Hours (10 days Intensive course)

### Closing Date for Application: 24.1.2013

*Forms are available in all Access Engineering offices and HIBT Jaffna Campus.*

HIBT Path Towards Success
HIBT Campus - Jaffna
#1, 1st Lane, Brown Road, Jaffna.
Tel : 021 7 200 266

*Implementation Partner:*
Skills for Success (Private) Limited
#1, Sunandarama Road, Kalubowila, Dehiwala
011 2 819 820 www.s4s.lk www.hibt.lk


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06.10.1932

மறைவு
02.02.2012

### அமரர் சதாசிவம் சிவபாக்கியம்

திதி: தசமி (21.01.2013)

ஆண்டு ஒன்றாகியும்
ஆறவில்லை எம்மனம்
காலங்கள் எத்தனை கடந்தாலும்
மாறாது உங்கள் நினைவலைகள்

ஐயா கடையடி
மீசாலை கிழக்கு;
மீசாலை

- குடும்பத்தினர்

(சி-2189)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இரக்கமும் ஏமாற்றமும்

"இரக்கப்படு! ஆனால், ஏமாந்து போய்விடாதே!'' என்று புத்திமதி கூறுவதுண்டு.

நம்மில் பலர் அதிகம் இரக்கம் காட்டி, அதனால் ஏமாந்து போகிறோம். நாம் மட்டுமல்ல... அந்தக் காலத்திலேயும் கூட இரக்கப்பட்டு ஏமாந்து போனவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள்.

இது தொடர்பாக அதிகமான கதைகளை ஆன்மீகப் பேச்சாளர்கள் கூறி வருகிறார்கள்.

இருந்தாலும் அதிலே ஒரு கதையை இப்போது உங்களுக்கு கூறலாம் என்றொரு ஆசை.

சரி, இப்போது கதைக்கு வருவோம்...

ஒரு காட்டிலே முனிவர் இருந்தார். முன்பெல்லாம் முனிவர்கள் காட்டிலேயே வசித்து வருவது வழமையாக இருந்தது. அதனால் இந்த முனிவர் காட்டிலே ஒரு ஆச்சிரமம் கட்டி அங்கே உட்கார்ந்திருந்தார். இவரிடம் இரக்கம் நிறைந்த சுபாவம் இருந்தது.

அந்தக் காட்டிலே அவருக்குத் துணையாக ஒரு நாய் இருந்தது. அந்த நாய் எப்போதுமே அவரை சுற்றி சுற்றி வந்து கொண்டேயிருக்கும்.

ஒருநாள் அந்த நாய் ஆச்சிரமத்தினுள் ஒரு மூலையிலே அமர்ந்து அழுது கொண்டிருந்தது.

இதைப் பார்த்த முனிவருக்கு மனம் இளகிப்போய் விட்டது.

அந்த நாயை அழைத்தார். அப்போது அது அருகில் வந்து நின்றது. "ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டார்.

''எனக்கு இக்காட்டிலே வாழ்வதற்கு பயமாக இருக்கிறது'' என்றது.

"நான் இருக்கும் போது உனக்கென்ன பயம்?'' என்றார்.

"நீங்கள் எப்போதும் என் அருகில் இருப்பதில்லை... சில சமயம் காட்டிலே இங்கேயும் அங்கேயுமாகத் தனியாக உலா வந்து கொண்டிருப்பேன். அந் நேரங்களில் நிறைய "நரி"கள் உலா வரும். அவைகள் என் மேலே பாய்ந்து கடித்து விடுமோ எனப் பயமாக இருக்கிறது'' என்று கூறியது.

"கவலைப்படாதே! என்னிடம் மந்திர சக்தி இருக்கிறது. அதைப் பயன்படுத்தி உன்னையே நரியாக மாற்றி விடுகிறேன்'' என்றார்.

அதே மாதிரி ஒரு மந்திரத்தைக் கூறி, அந்த நாயை நரியாக மாற்றினார்.

"இனிமேல் கவலைப்படாதே! எதிர்வரும் காலங்களில் மற்றைய நரிகள் கூட உன்னைப் பார்த்துப் பயப்படும்'' என்றார்.

இப்படியாக நாட்கள் நகர்ந்தன.

மறுபடியும் நரி உருவத்திற்கு மாறிய உள்ள நாய் அழுதது.

மீண்டும் அதனை அழைத்து "ஏன் அழுகிறாய்?'' என்று முனிவர் கேட்டார்.

''இக் காட்டிலே நிறைய சிறுத்தைகள் இருக்கிறது. அதைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குப் பயமாக இருக்கிறது. எந் நேரத்திலே என்ன நடக்குமோ என்ற ஏக்கம் என்னை ஆட் கொண்டுள்ளது'' என்று கூறியது.

"அப்படியா! சரி கவலைப்படாதே... உன்னையும் ஒரு சிறுத்தை போல் மாற்றி விடுகிறேன்'' என்று கூறி மந்திரத்தைச் சொல்ல, அது சிறுத்தையாக உருவம் பெற்றது.

சிறிது நாட்கள் நகர சிறுத்தை உருவத்திலே இருந்த நாய் மறுபடியும் அழ ஆரம்பித்தது.

"என்ன காரணம்?'' என்று விசாரித்தார்.

''இந்த காட்டிலே அதிகபடியான உருப்பெருத்த சிங்கங்கள் வசித்து வருகின்றன. அவற்றினால் எனக்கு உயிராபத்து வந்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது'' எனக் கூறியது.

"சரி... உன்னையும் ஒரு பெரிய சிங்கமாக மாற்றி விடுகிறேன்'' என்று மந்திரத்தைக்கூறி மாற்றினார்.

"நீ இப்போது இந்த காட்டுக்கே ராஜா...'' என்றார்.

சிங்கமாக இருந்த நாய் யோசிக்க ஆரம்பித்தது. உடனே அந்த முனிவர் மேலே பாய்ந்து கடிக்க முயற்சித்தது.

"என்ன இது... என்னையே கடிக்க வருகிறாய்?'' என்று கேட்டார் முனிவர்.

"நீ என்னை விட பெரிய சிங்கமாக வேறு யாரையாவது மாற்றி விடக்கூடாது. இருந்தாலும் உன்னுடைய மந்திரம் சக்தி மிக்கது. ஆதலால் உன்னை உயிரோடு விட்டு வைத்தால் ஆபத்து'' என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்தது.

"ஆஹா! இரக்கம் காட்டி ஏமாந்து போய் விட்டோமே!'' என்பது அப்போதுதான் முனிவருக்குப் புரிந்தது.

உடனே சாமர்த்தியமாக ஒரு காரியம் செய்தார். ஒரு பலம் பொருந்திய மந்திரம் ஒன்றைக் கூறினார். உடனே அந்தச் சிங்கம் மறுபடியும் பழைய படியே நாயாகத் தோற்றம் பெற்றது. வேறு வழி தெரியாது அவர் காலையே மறுபடியும் சுத்தி வர ஆரம்பித்தது.

இரக்கம் காட்டலாம்; ஆனால், ஏமாந்து போய்விடக்கூடாது என்பதை விளக்கவே இக்கதை கூறப்பட்டுள்ளது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# பணிப்பெண்கள் சவுதி செல்வதை தடுத்தால் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும்

## வேலைவாய்ப்பு பணியகம் கருத்து

இலங்கைப் பெண்கள் சவுதி அரேபியாவுக்கு பணிப்பெண்களாக செல்வதை தடுப்பதற்குதற்போதைய நிலைமையில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அவ்வாறு பணிப்பெண்கள் சவுதி செல்வதைத் தடுத்தால் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

ரிசானா நபீக்கிற்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதன் பின்னரும் சவுதி அரேபியாவுக்கு செல்லும் பணிப்பெண்களின் எண்ணிக்கை குறையவில்லை என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் அமல் சேனாதிலங்கார சுட்டிக்காட்டியுள்ளார்.

பணிப்பெண்களாக வெளிநாடு செல்வதனை நிறுத்தக்கோரி பெண்கள் உரிமைகள் அமைப்பு கோரிக்கை விடுத்து வருகின்றமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், உள்நாட்டு பணியாளர்கள் சவுதி அரேபியாவுக்குவழமைபோன்று செல்கின்றனர். அவர்கள் செல்வதை கட்டுப்படுத்தவோ அல்லது நிறுத்தவோ முடியாது. அவ்வாறு அவர்களை கட்டுப்படுத்த எம்மிடம் எவ்வித காரணமும் இல்லை.

இதேவேளை, எமது கொள்கையை மாற்ற வேண்டுமாயின் உயர் இடத்திலிருந்து அறிவுறுத்தல் வர வேண்டும். அதைவிடுத்து தனி மனிதனான நான் என்ன செய்ய முடியும்.

அவ்வாறு பணிப் பெண்கள் சவுதிக்கு செல்வதை நாம் நிறுத்தினால் பின்னால் பாரிய விளைவுகளையும் சந்திக்க நேரிடும். அதாவது சவுதியில் தற்போது பணிபுரியும் ஆறு இலட்சம் பேர் வேலையை இழக்க வேண்டிய நிலையும் ஏற்படும் எனவும் தெரிவித்தார். (செ-11)

# கஞ்சா பைக்கற்றுக்களுடன் மன்னாரில் ஒருவர் கைது

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊர்மலை எனும் பகுதியில் ஒரு கிலோ 130 கிராம் கஞ்சா பைக்கற்றுக்களுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளாரெனவும் அவரிடமிருந்த கஞ்சா பைக்கற்றுகளும் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளாரெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-9-6)

# யானைத் தந்த முத்துக்களுடன் இருவர் கைதாகி விளக்கமறியலில்

நாவலப்பிட்டி பகுதியில் பெறுமதி மிக்க யானைத் தந்தத்திலுள்ள முத்துக்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரையும் நாளை செவ்வாய்க்கிழமை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்ததுடன் இவர்களில் பெண் ஒருவரும் உள்ளடங்குகின்றார். நாவலப்பிட்டி நீதவான் முன்னிலையில் இவர்கள் ஆஜர்ப்படுத்தப்பட்டபோதே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (செ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 220 | 160 |
| உருளைக்கிழங்கு | 70 | 80-120 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 200 | 300 |
| தக்காளி | 90 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 90 | 80 | 100 | 100 |
| கரட் | 130 | 90 | 140 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 100 | 120 | 80 | 70 |
| வாழைக்காய் | 75 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 100-140 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 140 | 190 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 90 | 100 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 120 | 180 | 240 | 160 |
| லீக்ஸ் | 120 | 140 | 140 | 160 |
| பீற்றூட் | 90 | 80 | 120 | 160 |
| கறிமிளகாய் | 200 | 190 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 | -- |
| போஞ்சி | 130 | 120 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 180 | -- | -- |
| கீரை - 1 பிடி | 20-40 | 50 | 20-30 | 30 |
| தேசிக்காய் | 30-40 | 90 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 30-40 | 35-40 |
| இராசவள்ளி | 90-110 | 90 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 120 | 240 | 60 | 100 |

# இராசி பலன்

21.01.2013
(தை 08, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
தசமி பின்னிரவு 1.46 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 6.02 மணிவரை
இராகுகாலம் 8.05-9.35 மணிவரை
சுபநேரம் 12.35-2.05 மணிவரை
கார்த்திகை விரதம்.

**மேடம்** விடியும் பொழுதே நல்ல செய்திகள் வந்து சேரும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும், யோசிக்காமல் செய்த வேலைகளில் கூட வெற்றி கிடைக்கலாம்.

**இடபம்** பெருமைகள் வந்து சேர கந்தனை வழிபட வேண்டிய நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள்.

**மிதுனம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தாராளமாகச் செலவு செய்து மகிழ்வீர்கள், எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு இரு முறை அலைய நேரிடலாம்.

**கடகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், பயண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான அறிகுறியுண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**சிங்கம்** சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வீட்டை அழகுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், தூர தேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**கன்னி** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்.

**துலாம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில பணிகளைச் செய்யாமல் விட்டு விடுவீர்கள், உடல் நலம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் கைகூடும், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன் வருவர், பணத் தேவைகள் பூர்த்தியாகும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**தனுசு** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், வியாபார விரோதம் விலகும், உடல் நலம் சீராகும்.

**மகரம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகள் நிறைவேறும்.


**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், சுப தகவல்கள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், தாய் வழியில் பாசம் கூடும்.


**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழிலில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

வள்ளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4ஆவது யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சி பதிவுகள்




யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக் கண்காட்சி கடந்த 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி நேற்றுவரை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

தொடர்ச்சியாக 4ஆவது வருடமாக இடம்பெற்ற இக் கண்காட்சியில் பல்வேறு வகையான காட்சிக்கூடங்களாக 365 காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இதில் உள்நாடு மற்றும் வெளிநாட்டை குறிப்பாக இந்தியா மற்றும் இந்தோனேசியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, ரிசாத் பதியுதீன் மற்றும் இந்திய துணைத் தூதுவர் வி.மகாலிங்கம், இந்தோனேசிய தூதுவர் மற்றும் யாழ்.மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சி மூலம் முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், வர்த்தத்துறையினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்பை இக்கண்காட்சி ஏற்படுத்தியது.

3 நாட்களாக நடைபெற்ற இக்கண்காட்சியில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## பங்குச்சந்தையில் தாக்கமில்லை

நாட்டின் பிரதம நீதியரசர் நியமனம் குறித்து தொடர்ச்சியாக நிலவி வந்த சர்ச்சைக்கு மத்தியில் பல்வேறு தரப்புகளிலிருந்து நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதகமான சூழ்நிலை எழும் என்னும் கருத்து பரவலாக முன்மொழியப்பட்டிருந்த போதிலும், கொழும்பு பங்குச்சந்தையின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் இந்த செயற்பாடு எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கவில்லை.

குறிப்பாக புதிய நீதியரசர் சர்ச்சையை அடுத்து பங்குச்சந்தை நடவடிக்கைகள் மந்தமடையும் என எதிர்பார்த்தபோதிலும், அந்த எதிர்பார்ப்புக்களை தகர்க்கும் வகையில், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது. அத்துடன் உள்நாட்டைச் சேர்ந்த சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடும் சந்தையில் பரவலாக் அவதானிக்க முடிந்தது.

இதனைத் தொடர்ந்து கடந்த வாரம் பிரதான சுட்டெண்ணான அனைத்து பங்கு விலைச்சுட்டெண் 5800 புள்ளிகளை கடந்திருந்தது.

கடந்த ஒக்டோபர் மாதத்தின் பின்னர் முதல் தடவையாக அனைத்து பங்கு விலைச்சுட்டெண் 5800 புள்ளிகளை கடந்தமை இதுவே முதல் தடவையாகும்.

## வங்கித்தொழில் உதவியாளர்களுக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை மத்திய வங்கி அதன் குழுமத்துடன் இணைந்து கொள்வதற்கான பல வாய்ப்புக்களை தற்போது கொண்டிருக்கிறது எனவும் இதன்படி வங்கித்தொழில் உதவியாளர்கள்(பயிலுநர்கள்) பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிபுத் திகதியான 2013 பெப்ரவரி 20 அன்று 18 வயதிற்கு குறையாமலும் 23 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2 வருட பயிற்சி காலத்தில் அனைத்து நிலையான படிகள் உள்ளடங்கலாக மாதமொன்றுக்கு ரூபா 27,500 அதன் பின்னர் தகுதியானவர்கள் எனக் காணப்படும் பயிற்சியாளர்கள் உயர் அலுவலர் அல்லாத தரம் II இனுள் உள்வாங்கப்படுவதற்கு பரிசீலிக்கப்படுவர் என அறிவித்துள்ள மத்திய வங்கி, இது தொடர்பான மேலதிக தகவல்களையும் விண்ணப்ப படிவத்தையும் www.cbsl.gov.lk என்ற மத்திய வங்கியின் இணையத்தள முகவரியில் பார்வையிடலாம்.

## திவிநெகும திணைக்கள பணிகள் ஆரம்பம்

திவிநெகும வாழ்வின் எழுச்சி திணைக்களத்தை எதிர்வரும் மார்ச் மாதம் முதல் முழுமையாக இயங்க வைப்பதற்கான முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஆர்.பி.பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி அதிகார சபை, தனலங்கா அபிவிருத்தி அதிகார சபை, தென்மாகாண அபிவிருத்தி அதிகார சபை, மலையக அபிவிருத்தி அதிகார சபை, மலையக கிராமிய மறுமலர்ச்சி ஆணைக்குழு, சமுர்த்தி ஆணையாளர் திணைக்களம் என்ற 5 நிறுவனங்களிலுமுள்ள சுமார் 27 ஆயிரம் பேரையும் ஓய்வூதியம் பெறும் அரச ஊழியர்களாக உள்வாங்குவதற்கு ஏதுவாக அவர்களது தனிப்பட்ட சேவைகளை பரிசீலிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக சமுர்த்தி வங்கிகளாக இயங்கும் 1073 வங்கிகளும் தற்போது வழங்கப்படும் சேவைக்கு மேலதிகமாக வாழ்வின் எழுச்சி சமூக அடிப்படையிலான வங்கியாக மாற்றமடைவதுடன் சட்ட ரீதியாக்கப்படும் என்றும் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்தார்.

வாழ்வின் எழுச்சி சட்ட மூலம் கடந்த 8-ம் திகதி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது.






இலங்கை வங்கியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி ராசிக் சரூக் தனது கடமைகளை இலங்கை வங்கித் தலைமைக் காரியாலயத்தில் கடந்த புதன்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் டி.எம்.குணசேகர, பணிப்பாளர் ஆர்.சிவராமன், பணிப்பாளர் சபை செயலாளர் ஜானகி சிறிவர்த்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.



அலையன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் புதிய கிளை கடந்த வியாழக்கிழமை யாழ்.பலாலி வீதி, திருநெல்வேலியில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அலையன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை பொது முகாமையாளர் சந்திமால் கெட்டியாராச்சி உட்பட பலர் கலந்து கொண்டனர். யாழ்.மாவட்டத்தில் அலையன்ஸ் காப்புறுதி நிறுவனம் 3ஆவது கிளையை ஆரம்பித்துள்ளது.

## சரிந்தது சீன பொருளாதாரம்

சீன பொருளாதாரம் வளர்ச்சி 7.8 சதவீதமாக சரிந்துள்ளது. உலக பொருளாதாரமே நிலை குலைந்த நிலையிலும் தொடர்ந்து படு வேகத்தில் முன்னேறிக் கொண்டிருந்த சீனா பொருளாதாரம் தற்போது சரிந்துள்ளது.

கடந்த 13 ஆண்டுகளில் முதல் முறையாக இரட்டை இலக்க வளர்ச்சியை அடைந்து வந்த சீனாவின் பொருளாதாரம் முதல் முறையாக மிகக்குறைந்த அளவான 7.8 சதவீத வளர்ச்சிக்கு சரிந்துள்ளது.

சீனாவின் பொருளாதாரம் பெரும்பாலும் ஏற்றுமதியே சார்ந்துள்ளது.சீனப் பொருட்களை நம்பித்தான் பல அமெரிக்க, ஐரோப்பிய சூப்பர் மார்கெட்டுக்கள் இயங்கி வருகின்றன. இந்த நிலையில் அமெரிக்கா, ஐரோப்பாவில் நிலவும் தொடர் பொருளாதார மந்தம் காரணமாக சீனாவின் இறக்குமதியை அவை பெருமளவு குறைத்து விட்டன. இதனால் சீனாவின் பொருளாதார வளர்ச்சி அடிவாங்கி ஆரம்பித்துள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5746.49 | 5875.77 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,133.87 | 3,174.36 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 4,202.794 |

**உயர்வடைந்தபங்குகள்** ஈகுவிட்டி ரூ பிஎல்சி(29.80),எல்எம்எப்(125.00),ஜிஎஸ் பினான்ஸ்(630.00),சாம்சன் இன்ரநெற்(93.00),சிஎப்ஜ(117.50).

**சரிவடைந்தபங்குகள்** மிரமர்(82.40), ஓட்டோரும் (801.00), ஹரிச்சந்திர(2424.80), ஜெஸ்னர்(200.00),செலிங்கோ இன்சுரன்ஸ்(850.00)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 124.99 | 128.24 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 199.13 | 205.27 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 166.26 | 172.11 |
| சுவிஸ் பிராங் | 132.58 | 137.89 |
| கனேடிய டொலர் | 125.91 | 130.70 |
| அவுஸ்திரேலிய டொலர் | 130.60 | 135.85 |
| சிங்கப்பூர் டொலர் | 101.47 | 105.18 |
| ஜப்பான் யென் | 1.38 | 1.43 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.33 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.49 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றிநெல் களையினால் கிளி.விவசாயிகள் பாதிப்பு

(சிவநகர்)

கிளிநொச்சி பெரிய பரந்தன், குஞ்சுப் பரந்தன் ஆகிய பிரதேச வயல் நிலங்களில் பன்றி நெல் எனும் களையின் பெருக்கத்தினால் விவசாயிகள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இக்களையின் பெருக்கம் காரணமாக நெல்விளைச்சலில் பாதிப்பேற்பட்டுள்ளதுடன் முதிர்ந்த நெல்லை அறுவடை செய்வதிலும் களைகளை அகற்றுவதிலும் தேவையற்ற சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பிரதேச விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் விபரீதமான முறையில் பரவிவரும் இப்பன்றி நெல் களைகளை அழிப்பதற்கு தெரிவுக்களை நாசினிகளை தருவிப்பதாக கிளிநொச்சி விவசாய திணைக்களம் தெரிவித்திருந்தபோதும் இதுவரையிலும் அவ்வாறானதொரு களை நாசினிகள், தமக்கு தரப்படவில்லை என குறித்த பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளைஅவற்றின் அதிக பரம்பல் காரணமாக பொறிமுறை ரீதியில் அவற்றை பிடுங்கி அகற்ற முடியாதுள்ளதாகவும் இந்நிலையில் விவசாய திணைக்களம் விரைந்து செயற்பட்டு தமது அறுவடை நடவடிக்கைக்கு உதவ வேண்டும் எனவும் கமக்காரர் சங்கம் மற்றும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (செ-5-254)

# மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவாலியூர் களை ஓடையம்பதி நாகலிங்கேஸ்வரர் தேவஸ்தான மகா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் 8.36 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இவற்றிற்கான கிரியைகள் இன்று திங்கட்கிழமை அதிகாலை 3.25 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளதுடன் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதலும் நடைபெறுமென ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது. (செ-9)

♦♦♦♦♦♦♦

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை ஸ்ரீ சாமுண்டீஸ்வரி சமேத ஞான வைரவர் தேவஸ்தான கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.06 மணி தொடக்கம் 8.32 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள்யாவும்இன்று திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளதுடன் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதலும் நடைபெறுமென ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது. (செ-9)

# தரம் 6 அனுமதி

(யாழ்ப்பாணம்)

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் தரம் 6 அனுமதிக்குரிய கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்ட வெட்டுப்புள்ளியாகிய 155 அல்லது அதற்கு மேலதிகமான புள்ளிகளை பெற்ற மாணவர்களில் இதுவரைஅனுமதியினை பெற்றுக் கொள்ளாதவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாகதங்களதுஅனுமதியினை பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர் திரு [illegible] அறிவித்துள்ளார். (செ-9)


**WESTERN UNION** தொடர்ந்தும் உங்கள் சேவையில்

**MONEY TRANSFER** உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன் கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உடுபுடைவைகள், CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவு களிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்

**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்**

303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

T.P.No:-0212225392

சி -2093



## கல்வி ஆண்டு 2013 விண்ணப்பம் கோரல்

**சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர்களுக்கான தொழில்சார் பட்டப்படிப்பு விண்ணப்பம் கோரல்**

(ACCA) ASSOCIATION OF CHARTERED CERTIFIED ACCOUNTANTS- U.K (சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர் சம்மேளனம்) இன் கற்கை நெறியை யாழ். நகரில் K-AIMS கல்வி நிறுவனத்தினூடாக மேற்கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

K-AIMS ஆனது 2012 ஆம் ஆண்டு தனது யாழ்.நகர கிளையை ஆரம்பித்தது முதல் தனது இரண்டாவது பிரிவு மாணவர்களை பரீட்சைக்கு தயார் செய்துள்ளது. இவ்விண்ணப்பக் கோரலானது மூன்றாம் பிரிவுக்கானது. வகுப்புக்கள் FEBRUARY 5 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும்.

ACCA கற்கை நெறியானது மூன்று நிலைகளை கொண்டது.

1.DIPLOMA-6 மாதம்
2. DEGREE- ஒரு வருடம்
3. ACCA- ஒரு வருடம்.

O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் DIPLOMA நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.

HNDA, யாழ். பல்கலைக்கழக பட்டப் படிப்பை பூர்த்தி செய்த மாணவர்கள் DEGREE நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 31 JANUARY 2013**

**மேலதிக தகவல்களுக்கும் விசாரணைகளுக்கும் 0772555814**

| Colombo | JAFFNA |
|---|---|
| Level 4 | 3-1/2 |
| Access Towers | Sirambiyadi Lane |
| 278,Union Place | { Off Stanley Road} |
| Colombo 02 | Jaffna. |

முறைப்பாடுகளுக்கும் பரிந்துரைகளுக்கும் 0771065363



28ம் ஆண்டில் யாழ் கலாலயா பயிற்சியகம் Yaarl Kalaalayah Academy Jaffna 1985

முன்பு யாழ். பெருமாள் கோயிலுக்கு அண்மையாக இயங்கி வந்த மேற்படி பயிற்சி நிலையம் தற்போது தனது ஆரம்ப கால இடமாகிய யாழ். போதனா வைத்தியசாலைக்கு பின்புறமாகவுள்ள விக்ரோறியா வீதியில் இயங்குகிறது.



**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**





✌ கேக் ஐசிங், உணவு தயாரித்தல் , ✌ Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்) ✌முக அழகுக் கலை (Facial) ✌ Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்) ✌ இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**



✌ (B)பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள்.

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 27-01-2013 (தைப்பூச நாள்) காலை 9.30 மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 30-01-2013 காலை 9.30 மணி**



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து வேளாளர் நட்சத்திரம்: உத்தராடம் 2 உயரம்: 5’8” கி.பா: 4.5 தகைமை/தொழில்: BDS (பல் வைத்தியர் தனியார்) தொ.இ: B -1012 | பிறப்பு: 1978 இந்து வேளாளர் நட்சத்திரம்: பூராடம் உயரம்: 5’2” கி.பா: 79, 8 இல் செவ். தகைமை/ தொழில்: ஆசிரியை (விவாகரத்து) தொ.இ: G -1056 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர் நட்சத்திரம்: கேட்டை 1 உயரம்: 5’8” கி.பா:26.5 தகைமை/தொழில்: Mechanical Engineering, Civil Engineering தொ.இ: B -1013 | பிறப்பு: 1977 இந்து விஸ்வகுலம் நட்சத்திரம்: அனுசம் 2 உயரம்: 5’3” கி.பா: 48, 1இல் செவ் தகைமை/ தொழில்: O/L, Diploma in Computer, Diploma in Montessori (முன்பள்ளி ஆசிரியை) தொ.இ: G-1058 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர் நட்சத்திரம்: ரோகினி 3 உயரம்: 5’6” தொ.இ: B -1017 | பிறப்பு: 1992 இந்து வேளாளர் நட்சத்திரம்:ஆயிலியம், 7 இல் செவ் தகைமை/ தொழில்: A/L தொ.இ: G -1059 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர் நட்சத்திரம்: அத்தம், 2 இல் செவ் உயரம்: 5’5” தகைமை/தொழில்: BSc in Information Technology (Software Engineering) தொ.இ: B -1018 | பிறப்பு: 1982 இந்து வேளாளர் நட்சத்திரம்: திருவாதிரை 2 உயரம்: 5’6” தகைமை/ தொழில்: HNDA, AAT Accountant, Clerk தொ.இ: G -1063 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வீதி புனரமைப்பு தாமதிப்பதால் பொதுமக்களின் சிரமம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி புனரமைப்பு வேலைகள் தாமதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதனால் பொதுமக்கள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


யாழில் தற்போது வீதி அகலிப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இவ் அகலிப்பு பணிகள் ஆரம்பத்தில் துரிதமாக காணப்பட்ட போதிலும் காலப்போக்கில் மந்த நிலையினை அடைந்துள்ளது.

யாழ்.நகர், புறநகர்ப் பகுதிகளிலுள்ள வீதிகள் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பெரிய பள்ளங்கள் தோண்டப்பட்டு பின்னர் அவற்றினை செப்பனிடாமல் நீண்ட காலமாக கைவிட்டு வருகின்றனர்.

கஸ்தூரியார் வீதி புனரமைப்பு பணிகள் முழுமையாக கைவிடப்பட்டுள்ளதோடு பிறவுண் வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவே இல்லை. கே.கே.எஸ். வீதியின் வீதி அகலிப்பு பணிகள் மந்த கதியிலே இடம் பெறுகின்றது.

கற்களினை நடுவீதியிலே குவித்துவிட்டு எவ்வித அபாய எச்சரிக்கை குறியீடுகளும் இங்கு போடப்படவில்லை. இவ்வாறான மந்த கதியிலான வீதிப்புனரமைப்பினை கைவிட்டு துரித முறையில் செயற்படல் வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

சென்ற வருடம் கூட நாச்சிமார் கோவிலுக்கு அருகில் வீதி அகலிப்பில் ஒழுங்கு முறையான பாதுகாப்பு போடப்படாமையினால் வீதியில் காணப்பட்ட பள்ளத்தினுள் இளைஞரொருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)




நன்றி:- ஐலண்ட்.

# சகல துறைகளையும் முன்னேற்றும் முகமாக வாழ்வின் எழுச்சி திட்டம் வடிவமைப்பு

## சிறந்த திட்டம் இது என யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வாழ்வின் எழுச்சித் திட்டமானது இதுவரை பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் அமுல் படுத்தப்பட்ட திட்டங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த திட்டமாக காணப்படுவதுடன் நாட்டின் சகல தொழிற்றுறைகளையும் முன்னேற்றும் ஒரு தேசிய திட்டமாகும் என திவிநெகும திட்டம் தொடர்பாகவும் யாழ்.மாவட்டத்தில் இத் திட்டத்தினூடாக மேற்கொண்டு வரும் அபிவிருத்தி குறித்தும் யாழ்.மாவட் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கை சுதந்திரம் அடைந்த காலந்தொட்டு பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கங்களும் இலங்கையில் பரவலாக காணப்படுகின்ற வறுமையைத் தணிக்கும் நோக்குடன் பல்வேறு வகையான செயற்றிட்டங்களை செயற்படுத்தி வந்துள்ளன.

கடந்த 1990 ஆம் ஆண்டுகளில் இருந்து வறுமையை தணிப்பதற்கான செயற்றிட்டங்கள் படிப்படியாக அதிகரித்து வருவதுடன் வறுமையைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவையும் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

முக்கியமாக வறுமையின் காரணமாக பல இளைஞர் யுவதிகள் தவறான வழிக்கு இட்டுச் செல்வதை தடுப்பது, வறுமையைத் தணிப்பது ஒரு முக்கிய தேவையென பதவிக்கு வருகின்ற அரசாங்கங்கள் உணர்ந்துள்ளமையால் பல்வேறு வகையான வறுமைத் தணிக்கை திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலும் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது நாடு முழுவதும் நடைமுறைப் படுத்தப்படும் வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டம் (திவிநெகும) வறுமை ஒழிப்பின் ஒரு முக்கிய திட்டமாக கருதப்படுவதுடன் இதன் மூலம் நாடு முழுவதும் 25 இலட்சம், மக்களின் பொருளாதார அலகுகளை மேம்படுத்தும் நோக்குடன் 2011 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் முன்மொழியப்பட்டது.

உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நாடு முழுவதும் 25 இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை விருத்தி செய்யும் நோக்குடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் 43 ஆயிரத்து 500 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அதாவது ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் தலா 100 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு மரக்கறி விதைகள், பழமரங்கள், தென்னம் பிள்ளைகள், கோழிக்குஞ்சுகள் மற்றும் கடற்றொழில், மீன்பிடி உபகரணங்கள் என்பன கட்டம் கட்டமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் இதனைத் தவிர அரசாங்க உத்தியோகத்தர்கள், பாடசாலைகள் என்பவற்றிற்கும் மரக்கறி விதைகள், பழமரங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் பொது இடம் தெரிவு செய்யப்பட்டு அவ்விடத்தில் வீட்டுத் தோட்டச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை 4 கட்டங்களாக விவசாய உற்பத்தித் திட்டம் தொடர்பாக மரக்கறி விதைகள், பழமரக்கன்றுகள் என்பன விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதனைவிட பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் ஒரு இலக்காக மக்களின் போசாக்கு நிலையை மேம்படுத்தல் என்பதற்கமைவாக நாடு முழுவதும் ஒரு குடும்பத்திற்கு 10 கோழிக்குஞ்சுகள், கூடுகள் என்பன இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதற்கட்டமாக மொத்தம் 200 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒரு குடும்பத்திற்கு 10 கோழிக்குஞ்சுகளும் கூடும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2 ஆம் கட்டமாக ஆயிரத்து 300 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் கீழ் மீனவ குடும்பங்களின் மீன் பதனிடல் செயற்பாட்டின் மூலம் விற்பனையை மேம்பாடடையச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் 2012 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 150 மீனவ குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மீன் பதனிடல் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டதுடன் பிடிக்கப்பட்ட மீனை பதனிடல் செய்வதற்காக 150 தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பதனிடல் செயற்பாடுகளினால் சுத்தமான கருவாடுகளை எதிர்காலத்தில் கிடைக்கப் பெறச் செய்வதுடன் எதிர்காலத்தில் இதே பதனிடல் செயற்பாட்டை ஏனைய மீனவர் குடும்பங்களும் பின்பற்றக் கூடியதாக இருக்கும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஆகியன இணைந்து நடாத்தும் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் மற்றொரு அங்கமாகிய நாடு முழுவதும் 62 ஆயிரத்து 800 குடிசைக் கைத்தொழில் மனைப் பொருளாதார அலகுகளை ஸ்தாபித்தல் என்ற திட்டத்தின் குடிசைக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கான செயற்பாடு யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது. குடிசைக் கைத்தொழில் நிகழ்ச்சி திட்டத்தின் செயற்பாடுகள் 5 கட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் மஹிந்த சிந்தனையின் தூர நோக்கிற்கமைவாக நடைமுறைப்படுத்தப் படும் வாழ்வு எழுச்சித் திட்டமானது இதுவரை பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் அமுல் படுத்தப்பட்ட திட்டங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த திட்டமாக காணப்படுவதுடன் நாட்டின் சகல தொழிற்றுறைகளையும் உள்ளடக்கி அமுல்படுத்தப்படும் ஒரு தேசிய திட்டமாகும்.

இத்திட்டமானது வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்டாலும் இத்திட்டமானது சகலரது வாழ்விலும் செழிப்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு திட்டமாகவே காணப்படுகின்றது. ஆகவே மக்களாகிய நாம் இத்திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கிச் செயற்படுத்துவோம் என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)




## பலாப்பழம் கேட்க திராட்சைப்பழமே கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

தாதியர்களின் மேலதிக நேர கொடுப்பனவு சுகாதார அமைச்சினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் தாதியர் சங்கத்தின் செயலாளரும் தாதியர் சங்கத்தின் வடமாகாண இணைப்பாளருமாகிய எஸ்.சிவயோகன் தெரிவித்துள்ளார்.

எனினும் இது பலாப்பழம் கேட்க திராட்சைப்பழம் கிடைத்தது போன்றதேயென அவர் கூறினார்.

அதன்படி தரம் III சேர்ந்தவர்களுக்கு 100 ரூபாவும் தரம் II சேர்ந்தர்வர்களுக்கு 125 ரூபாவும் தரம் I சேர்ந்தவர்களுக்கு 175 ரூபாவும் விசேட பிரிவினை சேர்ந்தவர்களிற்கும் 200 ரூபாவும் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

எனினும் இது நாம் கேட்டதனை விட மிகக் குறைவு என அவர் தெரிவித்தார். (செ-4)

## கும்பாபிஷேகம்

(தும்பளை)

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி தேவஸ்தான கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை அதிகாலை 4.47 மணி தொடக்கம் 6.36 மணி வரை உள்ள சுப வேளையில் நடைபெறும்.

இதில் பக்தர்கள் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேக பூஜை நடைபெற்று எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சங்காபிஷேக பூஜையும் இடம்பெறவுள்ளது. (செ-5-19)

## கொடுப்பனவை பெறுவதற்காக அலைந்து திரியும் பயனாளிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவச கொடுப்பனவுகளை பெறுவதற்காக பயனாளிகள் பிரதேச செயலகங்களுக்கும் கிராம சேவையாளர்களிடமும் அலைந்து திரிவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

குறிப்பாக முதியோருக்கான மாதாந்தக் கொடுப்பனவாக ஆயிரம் ரூபா அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தமக்கான மாதாந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்காக பிரதேச செயலகங்களில் இதற்கென பொறுப்பான உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டுக் கொள்வதையும் உத்தியோகத்தர்கள் பயனாளிகளை அலைக்கழிப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

அரசாங்கத்தின் உதவிகள் பயனாளிகளை சென்றடைவதற்கு உத்தியோகத்தர்கள் தடையாகவுள்ளனர் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (செ-6)

## புதிய நிர்வாக சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது. இதில் தலைவராக கலாநிதி நா.[illegible], செயலாளராக திருமதி [illegible] முரளிதரன், பொருளாளராக அந்தோனிப்பிள்ளை [illegible] மேலும் 12 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (செ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் இவ்வாண்டுக்கான தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் நிற்பதையும் தரம் 2 மாண்வர்கள் தரம் ஒன்று மாணவர்களை அழைத்து வருவதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## நிகழ்வின் நிழல்கள்






2012 ஆம் ஆண்டுக்கான அரச சிறுவர் நாடக விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு ஜோன்டீசில்வா கலையரங்கில் நடைபெற்றது. மட்டுப்படுத் தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான போட்டியில் யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் முதலாம் இடத்தையும் திறந்த போட்டியில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளதுடன் 14 விருதுகளையும் பெற்றுக் கொண்டன. இவற்றுக்கான விருதினை கலாசார மற் றும் கலை அலுவல்கள் அமைச்சர் டி.பி ஏக்கநாயக்க, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நாடக விரிவுரையாளர் க.இ.கமலநாதனுக்கு வழங்குவதையும் மேற்படி இரு நாடக காட்சிகளையும் முறையே படங்களில் காணலாம்.





வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் இவ்வாண்டு தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் தரம் 2 மாணவர்கள் தரம் ஒன்று மாணவர்களுக்கு பூச்செண்டு கொடுத்து தரம் ஒன்று மாணவர்கள் வரவேற்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)*




இலங்கை வங்கி புன்னாலைக்கட்டுவன் கிளையில் உழவர் திருநாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண சிரேஷ்ட பிரதேச முகாமையாளர் ரி.குமார் விவசாயி ஒருவருக்கு கடன் திட்டம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட வங்கி ஊழியர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)*





கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் இராஜகோபுரத்திற்கான அடிக்கல்நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அடிக்கல் நாட்டுவதையும் ஆலய தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

346



## தியாகம் செய்து உயர்வடைவாய்!

வழக்கம்போல் வித்யானந்தரின் குருகுலத்தில் மதிய உணவிற்குப்பின் மாண வர்கள் மரத்தடியில்கூட, வித்யானந்தரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார். காலையில் நடத்திய பாடங்களில் ஏதாவது சந்தேகம் இருந்தால் மாணவர்கள் குருவிடம் அந்தநேரத்தில் கேட்டுத் தெளிவு பெறலாம். பாடத்தை ஒழுங்காக கவனித்தீர்களா என்று வித்யானந்தரும் மாணவர்களைக் கேள்விகள் கேட்டு சோதிப்பார். அன்றும் அப்படியே எல்லோரும்கூட, குரு மாணவர்களிடம் இன்று என்ன பொரியல் உண்டீர்கள் என்றார்.

உடனே மாணவர்களில் புத்திசாலியான ஆனந்தன் எழுந்து குருவே! இன்று வாழைக்காய் பொரியல்! நான் குருகுலத்தில் சேர்ந்த தினத்தன்று எல்லோரும் சேர்ந்து நட்டுவைத்த வாழைக்கன்று ஓராண்டுக்குள் வளர்ந்து மரமாகி குலை தள்ளி இருந்தது. அம்மரத்தின் காய்களைப் பறித்துத்தான் இன்று பொரியல் செய்யப்பட்டது என்றான்.

அப்படியா! அவற்றைப் பழுக்கவைத்து பழமாகச் சாப்பிட்டு இருக்கலாமே? என்றார் குரு. அதற்கு ஆனந்தன் குருவே! குலையில் நூறுக்கும் மேலாகக் காய்கள் இருந்தன. அத்தனையும் பழுக்க வைத்தால் மிக அதிகமாகிவிடும். அதனால் ஏற்கனவே கொஞ்சம் பழுத்திருந்தவற்றை தனியாக வைத்துவிட்டு மிச்சத்தைத்தான் வேகவைத்து பொரியல் செய்தோம் என்றான். தொடர்ந்து அதிலிருந்த வாழைத்தண்டை இன்றிரவு சமைப்போம். மரத்தில் இலைகளில் தான் சற்றுமுன் உணவு அருந்தினோம். அம்மரப்பட் டையை உரித்து நார்நாராக பிரித்தெடுத்திருக்கிறோம். இவை பூத்தொடுக்க உதவும். அடிமரத்தின் கனமான பட்டை களை வைத்து கழிவுநீர் பாதை அமைத்து அது தோட்டத்தின் செடிகளுக்குச் செல்லுமாறு செய்திருக்கிறோம். எஞ்சிய பகுதிகளை உரக் குழியில் போட்டிருக்கி றோம். மரத்தின் அடியில் தானாகவே தோன்றிய கன்றுகளைத் தோண்டி எடுத்து தனித்தனியாக நட்டிருக்கிறோம் என்றான் ஆனந்தன்.

பார்த்தீர்களா நாம் உபயோகித்த நீரை உட்கொண்டு வளர்ந்த வாழை நமக்குப் பழங்களையும் காய்களையும் தந்தது மட்டுமன்றி தனது உடலையுமே நமக்காகத் தந்துவிட்டது. இதைத்தியாகத்தின்



சிகரம் என்று கூறலாம். இது நமக்கு கற்றுத்ரும் பாடம் என்ன தெரியுமா? உங்களை பூமியில் தோற்றுவித்து வளர்த்து ஆளாக்கிய பெற்றோருக்கு நீங்கள் வாழைமரம் போல் நன்றி காட்டி அவர்களுக்காக எந்தவிதத் தியாக மும் செய்யத்தயாராக இருக்கவேண்டும். உங்களுக்காக அருந்த நீரளித்த, உண்ண உணவளித்துத் தன் மடியில் தாலாட்டும் பூமியும் உங்கள் தாய்தான்! அந்தப் பூமித் தாய்க்கும் நீங்கள் நன்றி காட்ட வேண்டும். இவர்களைத் தவிர உங்களுக்கு உதவி செய்யும் ஒவ்வொருவருக்கும் நீங்கள் நன்றிக்கடனை செலுத்த வேண்டும் என்று நீண்ட விளக்கம் அளித்தார் வித்யானந்தர்.

குருவே! எங்கள் உடலை வளர்க்கும்பெற்றோர்போல் பூமித்தாயைப்போல் எங்கள் அறிவை வளர்க்கும் ஆசானுக்கும் என்றும் நன்றிக்கடன் காட்டவேண்டும். அவருக்காக பல தியாகங்கள் செய்ய வேண்டும். அவரைத் தெய்வமாக மதித்து வணங்க வேண்டும் என்ற ஆனந்தன் அவரை விழுந்து வணங்க எல்லோரும் அவனைப் பின்பற்றினர். குருவின் கண்கள் மகிழ்ச்சிப் பெருமிதத்தில் நனைந்தன.


## புளிய மரத்துப் பிசாசு

## அம்புலிமாமா கதைகள்

விநாயகபுரத்தில் வசித்து வந்த ரங்கையாவுக்கு வாழ்க்கையே போராட்டமாக இருந்தது. தினசரி அடிப்படைத் தேவைகளுக்கான வருமானத்தைக்கூட சம்பாதிக்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டான். அவன் மனைவியே குடும்பக் கஷ்டங்களை அடிக்கடி எடுத்துச் சொல்லி அவனை மேலும் சம்பாதிக்கச்சொல்லி நச்சரித்து வந்ததால் வாழ்க்கையே நரகம் ஆயிற்று.

ஒருநாள் அவன் பக்கத்து கிராமத்திலிருந்து வீட்டுக்குத் தனியாக திரும்பிக் கொண்டிருக்கையில் திடீரென சாலையிலிருந்த ஒரு புளியமரத்திலிருந்து ஒரு பிசாசு குதித்து ரங்கையா முன் நின்றது. அதை இலட்சியமே செய்யாமல் அவன் நடந்து செல்ல பிசாசு க்கு ஆச்சரியமாகவும் அதே சம யம் அவமானமாகவும் இருந்தது.

டேய் நில் என்று அவனை



அழைத்த பிசாசு ஏண்டா என்னைக் கண்டு பயப்படாமல் போகிறாயே! என்ன தைரியம்? என்று சினந்தது.

பிசாசே உன்னால் என்னை என்ன செய்யமுடியும்? ஒரே அறை அறைந்து என்னைக் கொல்ல முடியும். அதை இப்போதே தாராளமாகச்செய்! என்னைப் போல் நீயும் மனிதனாக இருந்தால்தான் மனிதன் படும் கஷ்டம் தெரியும். நானே குடும்பத் தொல்லை தாளாமல் தற்கொலை செய்ய நினைத்துக் கொண்டேயிருந்தேன்.

நீயே என்னைக் கொன்றுவிடு! அதன்பின்பு நானும் உன்னைப் போல் பிசாசாக மாறி சந்தோசமாக இருப்பேன் என்றான்.

அதைக்கேட்ட பிசாசு பிரமித்துப்போய் தற்கொலை செய்து கொள்ளும் அளவி ற்கு மனிதர்களுக்கு இத்தனை கஷ்டங்கள் என்றால் வீணாக நாமும் ஏன் அவர்களை துன்புறுத்தவேண்டும் என்று யோசித்தது. அன்றுமுதல் அது எந்த மனிதனையும் தொந்தரவு செய்யவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

**21**

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



எந்த மரத்து நெழல் சுகம்னு கேட்டா ஆளுக்கொரு மரத்தச் சொல்லுவாக.

ஆனா, மரத்து நெழலோட சுகம் மரத்துல இல்ல; இருக்கிற எடத்துல இருக்கு.

அட்டணம்பட்டி ஆளுகளுக்கெல்லாம் சுடுகாட்டு மரத்து நெழல் மாதிரி சுகம் கெடையாது எந்த மரத்துலயும்.

எப்பவோ விழுந்த இடியில இதுக்குமேல வளர மாட்டேன்னு அப்படியே நிக்குது பல வருசமா அந்த ஆலமரம். அந்தச் சுடுகாட்டுல செத்தும் சாகாம இருக்கிறது வெட்டியானும் அந்த ஆலமரமும்தான்.

பொணத்த எறக்கிவச்சுட்டு, வெட்டியான் பண்ற சாங்கியம் முடியிற வரைக்கும் சௌரியத்துக்கு எடம் பாத்து அங்கங்க ஒக்காந் துட்டாக ஆளுக.

"பொன்னுச்சாமி முன்ன போயிட்டான். இன்னும் எத்தன பேரு அவன் பின்ன போகப் போறமோ?"

"வெவசாயம் இப்படியே போனா விளங்கிருமாக்கும்? போய்ச் சேர வேண்டியதுதான்."

அந்தக் காலத்துல வெள்ளாமை நல்லாயிருந்துச்சு. மனுசனுக்குச் சீக்கு வந்துச்சு. இந்தக் காலத்துல மனுசனுக்கு மருந்து இருக்கு; வெள்ளாமைக்குச் சீக்கு வந்துருச்சு.

கால நீட்டிப் படுத்துட்டாரு கம்பளிக் கெழவன். அவரு வீட்டுக்குப் போனாலும் சேக்க மாட்டாக; அங்கேயே விட்டுட்டுப் போனாலும் கேக்க மாட்டாக. கை ரெண்டையும் அணைச்சுத் தலைக்கு ஆதரவா வச்சு அண்ணாந்து பாத்துக் கிட்டே பேசறாரு.

"நானும் மூணு தலமுறையா மண்ணக் கிண்டியே மண்ட காஞ்சு கெடக்கேன். இன்னைக்கு எந்த வெள்ளாமையாச்சும் முழுசா வீடு வருதாப்பா? எங்கிட்டிருந்துதான் வந்துச்சோ வெள்ளாமைக்கு இத்தனை சீக்கும்? வாழை போட்டா 'கு(ஞ)ழ நோய்' தாக்குது. கரும்பு போட்டா 'செந்தா(ஞ)ழ' அடிக்குது. தென்னைய நட்டா 'மண்டைப் புழுவு' விழுந்து குருத்து அழிஞ்சு போகுது. 'செவட்டை' அடிச்சா செத்தே போகுது தக்காளி, கத்தரி. வெண்டை நட்டா 'கத்தாழைச் சீக்கு'. சக்கரவள்ளிக் கெழங்கு நட்டா 'அரக்கு' அடிக்குது. 'காம்பழுகல் நோய்' வந்து மொண்ணையாப் போயிருது மொளகாச் செடி. கணக்குப் போட்டுப் பாத்தா விதைச் செலவுக்கு வந்து சேரல வெள்ளாமை. எங்க போயிச் சொல்ல? நம்ம பக்கம் இருந்த கடவுளே கட்சி மாறிருச்சு."

"கடவுளு என்ன பண்ணும் கடவுளு? காலமே மாறிப்போச்சு. ஆடிப்பட்டம் தேடி விதைன்னான். இப்ப எப்பவாச்சும் விதைச்சிருக்கமா? ஆடி மாசம் அடிக்கிற காத்துல உடுத்தியிருக்கிற துண்டுகூட பறந்துபோயிருச்சு. பேயிற காலத்துல காயுது; காயிற காலத்துல பேயுது."

"காலம் மட்டுமா? மண்ணே மாறிப் போச்சப்பா. ஒண்ணு போட்டாத் தொண்ணூறா வெளையிற மண்ணு இன்னைக்குச் சத்து இல்லாத சவமாப் போச்சா இல்லையா?"

"எப்படியிருக்கும் சத்து? பொட்டாசு பட்டாசுன்னு போடுறீக... என்னைக்கு நாட்டெருவு போட்டீக? எரு செஞ்ச மாதிரி இனத்தான் செய்ய மாட்டான்னு சொலவம் சொல்றீக. அப்பன் சிய்யான் காலத்துல மாதிரி ஆட்டுக் கெடை அமத்துனீகளா? கொழிஞ்சுக் குழை போட்டீகளா? கம்மாக் கரம்பை அடிச்சீகளா?"

"இயற்கையா புள்ள பெறந்தா நல்லாயிருக்குமா? செயற்கையா ஊசி போட்டுப்பெறந்தா நல்லாயிருக்குமா?"

"கருத்தமாயி என்ன கம்முன்னு இருக்க? பேசு. சுக்கு அறியாத கசாயமா? கருத்தமாயி அறியாத வெவசாயமா?"



உருமாலத் தலைக்கு அணவு கொடுத்து ஆலமரத்து அடித்தண்டுல சாஞ்சிருந்த கருத்தமாயி ஒரு கையில துண்டைப் புடிச்சு மறுகையத் தரையில ஊன்டி நிமிந்து ஒக்காந்தாரு.

"என் அனுபவத்துல சொல்றனப்பா. வெளவு கொறங்சு போச்சு. செலவு கூடிப்போச்சு; கடன் ஏறிப் போச்சு; வெல எறங்கிப் போச்சு; என்னய்யா ஆகும் வெவசாயத்தத் தவிர வேற ஒண்ணும் தெரியாதவன் பொழப்பு."

"நூத்துல ஒரு வார்த்தை கருத்தமாயி சொல்றது. இன்னைக்குப் பணக்காரன்தான் தேர்தல்ல நிக்க முடியும்; பசை உள்ளவன்தான் வெவசாயம் பண்ண முடியும்னு ஆகிப்போச்சு. ஒரு ஏக்கர் நெல்லு நட்டு எடுக்கனும்னா உசுரு போயி உசிரு வருது. சுத்துக்கால் வெட்ட ஆயிரத்து ஐநூறு, நாத்தங்காலுக்கு எழுநூறு, நாலு டிராக்டர் உழவுக்கு மூவாயிரத்தி எரநூறு, அடி உரத்துக்கு ஆயிரம், நடவு கூலி ஆயிரத்து ஐநூறு, களை எடுப்பு ரெண்டுக்கு ஆயிரம், ரெண்டு மருந் தடிக்க ஆயிரம், கருதறுக்க- ரெண்டாயிரம்- விதை நெல்லு வேற விட்டுப்போச்சு- அது ஒரு ஆயிரத்தி முந்நூறு. இதுல பாடு பாத்து, பண்டுதம் பாத்து உசுரைக் கையில புடிச்சு உழைச்சு அறுத்துக் களஞ்சேத்து அடிச் சுப் பாத்தா இந்தா இந்தான்னு இழுத்து நாப்பது மூடை வந்தாப் பெருசு. அன்னைக்கு என்ன வெலை விக்குதுங்கறது ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம். போட்ட கணக்கும் மூட்டக் கணக்கும் கூட்டிக் கடிச்சுப் பாத்தா, பொண்டாட்டி வித்துத் தண்டட்டி வாங்குன க்தைதான்."

"அத விடப்பா. பரம்பரையா வெளஞ்ச பூமி தஞ்சாவூரு; பொன்னு வெளயிற பூமி. தஞ்சாவூருக்கே தரித்தியம் வந்துருச்சுன்னா நீயும் நானும் எந்த மூலை? நெல்பழம்னு ஒரு சீக்கு வந்துருச்சாம். நெல்லு இருக்க அரிசி கூடிவர மாட்டேங்குதாம். பத்துல நாடு குடும்பம் பஞ்சம் பொழைக்கப் போயிருச்சாம் திருப்பூருக்கு. இனி விவசாயம் பண்ணி விடிஞ்சிருமாக்கும்...?"

"இருந்து என்ன பண்றதுன்னு செத்துப் போனான் பொன்னுச்சாமி. செத்து என்ன பண்றதுன்னு இருந்துக் கிட்டிருக்கோம் நாம."

எல்லாரையும் கருத்தமாயி கை அமத்துனாரு.

"எல்லாரும் எதுக்கப்பா செத்த பேச்சாப் பேசுறீக? பொழக்கற பேச்சப் பேசுங்கப்பா. விடிஞ்சா எந்திரிப்போம்னு நம்பித்தானப்பா பாயப் போட்டுப் படுக்கப் போறோம். இன்னைக்கில்லேன்னாலும் என்னைக்காவது ஒரு நாள் வெளையாமப் போகுமா? சாமி சண்டைக்காரனாப் போனாலும் பூமி கை விடாதப்ப."

பொன்னுச்சாமி பொணத்துக்குள்ளயிருந்து புகை கிளம்பிருச்சு.

சுடுகாட்டை விட்டு ஒண்ணுகூடித் திரும்புது ஊருச்சனம்.

சுடுகாடுவிட்டு மேடேறி ஒத்தப் புளியமரம் திரும்ப, எதுக்க வந்த சின்னப்பாண்டி கூட்டத்தவிட்டு அப்பனை ஒரு ஓரமா ஒதுக்கிக் காதுக்குள்ள சொன்னான்:

"யப்பா... மதினி பிள்ளைகளையெல்லாம் நடுவீட்டுல கூட்டியாந்து ஒக்காந்துக்கிட்டு ஆத்தாள வெளிய போடிங்குது அண்ணன்."

கருத்தமாயிக்கு மூஞ்சி சிறுத்துப் போச்சு.

"சுடுகாட்டுல இருந்து திரும்பறதுக்குள்ள இன்னொரு எழவா? என்ன பொழப்புடா இது?"

• • • • •

சுடுகாடு விட்டு சாதிசனத்தோட ஊருக்குள்ள போயிக்கிட்டிருந்த கருத்தமாய- காடு போ போங் குது; வீடு வா வாங் குது. என்ன செய்யக் காத்திருக்கானோ தலப் பெரட்டுப் புடிச்ச தலப்பிள்ள? அயிரை மீனுன்னு நெனச்சேன்; விலாங்குச் சேட்டை பண்ணுதே; அவன் கையில மண்ணு ஒட்டக் கூடாதுன்னுதான படிக்க வச்சேன்...? என் மூஞ்சியிலேயே சேத்தள்ளிப் பூசுதே களவாணிநாயி."

பெத்ததுகளுக்கும் பிள்ளைகளுக்கும் ஒரு பிரச்சன முப்பத்து முக்கோடி வருசமா தொப்புள்க் கொடி மாதிரி தொங்கிக் கிடேயிருக்கு. சொத்தை விட்டுறக் கூடாதுன்னு தொடுக்கி நிக்குதுக பிள்ளைக; சொந்தத்தை விட்டுறக் கூடாதுன்னு இடுக்கி நிக்குறாக பெத்தவக. சொத்து முக்கியம்னு நெனைக்கிறவன் கடைசியில கழுத்தைப் புடிக்கிறான்; சொந்தம் முக்கியம்னு நெனைக்கிறவன் கடைசியில காலப் புடிக்கிறான். இந்த ரெண்டையும் மாறி மாறிப் புடிக்கிறதனாலதான் முன்ன எட்டுவைக்க முடியாம நின்ன எடத்துலயே நிக்குது மனுசக்கூட்டம். இதுல பெத்தவகளுக்கோ பெத்ததுகளுக்கோ சின்னதா ஒரு துறவு மனப்பான்மை வந்துருச்சுன்னாத் தொந்தரவு தீந்திரும். ஆனா வருதா கழுதை? வர மாட்டேங்குது.இது புத்திக்கு எட்டுது; பொழப்புக்கு எட்டுதா? எட்டல. எல்லாத்தையும் கடந்துபோன்னு மனசு கத்துது. கடக்க முடியலையேன்னு உடம்பு சொல்லுது.

மூணு பசி இருக்கு ஒரு உசுருக்கு. இதயம்:- வயிறு வயித்துக்குக் கீழ இருக்கிற உறுப்பு. இந்த மூணையும் திருப்திப்படுத்துறதுக்கே சென்மம் செலவாகிப்போயிருது.

(தொடரும்)

## எங்க போயிச் சொல்ல? எங்க பக்கம் இருந்த கடவுளே கட்சி மாறிருச்சு...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை-ஜப்பான் உறவுக்கான முத்திரை

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் இராஜதந்திர தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு இரண்டு நினைவு முத்திரைகளும் முதல்நாள் உரைகளும் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த வைபவத்தில் தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க இந்த இரு முத்திரைகளையும் முதல்நாள் உரைகளையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

இந்த வைபத்தில் இலங்கைக்கான ஜப்பானியத்தூதுவர் உட்பட அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (செ-8)

## வெள்ளோட்ட நிகழ்வு

மண்டைதீவு சிறுப்புலம் ஸ்ரீ சுப்பிரமணிய தேவஸ்தானத்தின் சகடை வெள்ளோட்ட விழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது புதிதாக அமைக்கப்பட்ட மயில்வாகனம் மற்றும் இரும்பில் அமைக்கப்பட்ட சகடை ஆகியன வெள்ளோட்டம் பார்க்கப்படவுள்ளதாக ஆலய அறங்காவலர்கள் அறிவித்துள்ளனர். (செ-9)

# 33 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சியில் 5 அடி வான்பாலம்

## அமைச்சர் பசில் திறந்து வைத்தார்

(கிளிநொச்சி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 33 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி ஐந்தடி வான் பாலத்தினை அமைச்சர் பசில் ராஜபக்ஷ திறந்து வைத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 700 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்களை வழங்கியதோடு கிளிநொச்சி ஐந்தடி வான் பாலத்தினையும் கிளிநொச்சி மாவட்ட அஞ்சல் அலுவலகத்தையும் திறந்து வைத்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 50 மில்லியன் ரூபா செலவில் இந்த அஞ்சல் அலுவலகம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை 20 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி கனகாம்பிகைக் குளத்தினையும் அப்பகுதி விவசாய அமைப்பிடம் கையளித்தார்.

அமைச்சர் பசிலின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான விஜயத்தின் போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளு மன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் மழை வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இரத்தினபுரி மக்களால் அன்பளிப்பு செய்யப்பட்ட உலருணவுப் பொருட்கள் கையளிக்கப்பட்டபோது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்,

பாதிக்கப்பட்ட எம்மக்களுக்கு உலருணவுப் பொருட்களை வழங்கி எம்மக்கள் மீது கொண்டுள்ள பற்றை வெளிப்படுத்தி நிற்கும் இரத்தினபுரி மக்களுக்கு எமது மக்களின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதேவேளை கிளிநொச்சி ஐந்தடி வான் பகுதியினூடான பயணத்தின் போது பல ஆண்டுகளாக மக்கள் எதிர்கொண்டு வந்த போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக இப் பகுதியில் பாரிய பாலம் ஒன்றினை அமைப்பதற்கு அமைச்சர் பசில் தனது அமைச்சுக் கூடாக சுமார் 33 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கி பாலத்தினை அமைக்க உதவியுள்ளார்.

இதுவரைகாலமும் எம்மக்களுக்கு கிடைக்காதிருந்த சமுர்த்தி திட்டத்துடன் மேலும் எம்மக்களின் வாழ்நிலைமேம்பாட்டை ஏற்படுத்தக் கூடிய வாழ்வின் எழுச்சித்திட்டத்தையும் அவர் எமக்கு பெற்றுத் தந்திருக்கின்றார்.

இத்திட்டத்தினூடாக மிகப்பெரும் பலனைப் பெறுபவர்கள் வடமாகாணத்தில் வாழும் 60 வீதமான வறுமைக்கோட்டுக்கு கீழ்ப்பட்ட மக்களே.

ஆகவே இப்பாரிய திட்டம் இங்கு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்போது இயல்பாகவே எம்மக்களின் வாழ்வாதாரம் மேம்பட வாய்ப்புக்கள் கிட்டும்.

ஆகவே நடைபெற்று வரும் முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் அபிவிருத்தி செயற்பாடுகளையும் விரும்பி வரவேற்பதனூடாகவே எமது மாவட்டத்தை மேலும் மேம்பாடடையச் செய்ய முடியும். அதற்காக நாம் தொடர்ந்தும் உழைக்க தயாராக உள்ளோம் என்றார்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித்திட்டம் மற்றும் துரித மீட்சித்திட்டங்களின் பணிப்பாளர் லியனகே, மீள் எழுச்சித்திட்டம் மற்றும் துரித மீட்சித்திட்டங்களின் பிரதித் திட்டப்பணிப்பாளர் விஜயகிருஷ்ணன் ஆகியோரும் கரைச்சிப் பிரதேச செயலர் சாகேஸ்வரன், ஈ.பி.டி. பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், நீர்ப்பாசனத்திணைக்கள பொறியியலாளர் விகிர்தன் மற்றும் அரச திணைக்களங்களின் தலைவர்கள், பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (செ-6)

# சர்வதேச பயங்கரவாத அமைப்புக்கள் வடக்கில் செயற்படுகின்றன- அரசு

(கொழும்பு)

சர்வதேச பயங்கரவாத அமைப்புக்கள் வடக்கில் செயற்பட்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அல்கொய்தா, ஜிஹாத் மற்றும் தலிபான் ஆகிய இயக்கங்களுடன் தொடர்புகளைப் பேணுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான சட்டத்திருத்தங்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் மேற்கொள்ளப்படவுள்ளது. குறித்த சர்வதேச பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணுவோர் வடக்கு கிழக்கில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்புகளைப்பேணுவோருக்கு இரண்டாண்டு கால சிறைத்தண்டனையும் பத்து இலட்சம்ரூபா அபராதமும் விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணுவோருக்கு எதிரான தண்டனைகள் குறித்து தற்போதைய சட்டங்களில் குறிப்பிடப்படவில்லை.

எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் இந்தச் சட்டதிருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் ஜிஹாத் அல்கொய்தா மற்றும் தலிபான் அமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணுவோரின் சொத்துக்களை முடக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (செ-2)

# ஷிராணி சாதாரண பிரஜை அவருக்கு பாதுகாப்பு அவசியமில்லை

## ரஷாந்த ஜயக்கொடி தெரிவிப்பு

(கொழும்பு)

ஷிராணி நாட்டின் சாதாரண பிரஜைதான். அவருக்கு பாதுகாப்பு அவசியமில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஷாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கான பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக கூறி பொலிஸ் பாதுகாப்பை ஷிராணி பண்டாரநாயக்க கோரியிருந்தார்.

இருப்பினும் அவருக்கு தற்போது இலங்கையின் சாதாரண பிரஜை என்ற அடிப்படையில் அவருக்கான பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முன்னாள பிரதம நீதியரசர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஷிராணிக்கு எதிராக குற்றப்பிரேரணை முன்வைக்கப்பட்டு அவர் ஜனாதிபதியினால் பதவி விலக்கப்பட்டு புதிய பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-9)

# ஜீ.எஸ்.பி.பிளஸ் இழப்பால் தொழில்வாய்ப்பின்றி பலர்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்டத்தின் இழப்பானது தொடர்ந்தும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வரிச் சலுகை இழக்கப்பட்டதன் காரணமாக தொடர்ந்தும் தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருவதுடன் ஆயிரக்கணக்கானவர்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்து வருகின்றனர்.

ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டத்தின் நலன்கள் பங்களாதேசிற்கு வழங்கப்பட்டுள்ளதனால் இலங்கைக்கான நலன்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. கடந்த ஜனவரி 2 ஆம் திகதி இந்தச் சலுகைத் திட்டத்தின் மூலம் நலன் பெற்று வந்த இரண்டு தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்த சலுகைத் திட்டத்தின் மூலம் நன்மை பெற்றுக் கொண்ட பலர் பாதக விளைவுகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சலுகைத் திட்டம் இரத்துச் செய்யப்பட்டமையினால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-2)



இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் புதுவருட கொண்டாட்டங்கள் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முகாமையாளர் இ.பிறேமராஜன் வரவேற்புரை நிகழ்த்துவதையும், அருகில் மதகுருமார்கள் மற்றும் உதவி முகாமையாளர் ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்

# குற்றப்பிரேரணை ஆதரவிற்கு ஐ.தே.க இன்று நடவடிக்கை

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக இன்று திங்கட்கிழமை நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்றத்திற்கு சென்று குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தவர்களுக்கு எதிராக இதன்போது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இன்றைய தினம் இடம்பெறவுள்ள கட்சியின் தொழிற்சங்க கூட்டத்தின் போது இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து அவதானம் செலுத்தப்படும் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (செ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஷிராணியின் பதவி நீக்கத்தால் பொதுநலவாய மாநாட்டிற்கு சிக்கல்?

## புறக்கணிக்க முடிபு செய்கிறது கனடா

(கொழும்பு)

இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை நடத்த முடியுமா? என்பது தொடர்பில் ஆராயுமாறு கனடா அந்த அமைப்பின் அமைச்சரவை நடவடிக்கை குழுவிடம் கோரிக்கை விடுக்க உத்தேசித்துள்ளது.

இதன் அடிப்படையில் கனடா அறிக்கை ஒன்றை குறித்த நடவடிக்கை குழுவுக்கு அனுப்பவுள்ளதாக இலங்கையின் ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது கொண்டு வரப்பட்ட குற்றவியல் பிரேரணையை அடுத்தே இந்த நடவடிக்கையை கனடா மேற்கொண்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வை புறக்கணிக்கப்போவதாக கனடா அறிவித்துள்ளது.

இந்நிலையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வை இலங்கையில் நடத்த முடியுமா? என்பதை ஆராயுமாறு அமைப்பின் உறுப்பு நாடுகளிடம் கனடா கடிதங்கள் மூலம் கோரிக்கையும் விடுத்துள்ளது.

இதன் அடுத்த கட்டமாகவே கனடா பொதுநலவாய அமைச்சரவை நடவடிக்கை குழுவுக்கு அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளது.

கனடாவின் இந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் நடவடிக்கைக்குழு விசாரணைகளை நடத்தி இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்த முடியாது என்று கூறுமானால் அது இலங்கைக்கு பாரிய பாதிப்பை கொண்டு வரும்.

அத்துடன் விசாரணை முடியும் வரை பொதுநலவாய நாடுகளின் கூட்டங்களில் இலங்கைக்கு வாக்களிக்க முடியாத நிலை ஏற்படும். இதன்போது அந்த அமைப்பின் செயலாளர் கமலேஸ் சர்மாவுக்கும் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்களின் மாநாட்டை இரத்துச் செய்வதை விட வேறு வழியில்லாமல் போய்விடும் என்று லண்டனில் இருந்து இலங்கையின் ஆங்கில ஊடகத்துக்கு செய்தி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு திட்டமிட்டவாறு நடத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு தொடர்பில் கனடா மட்டுமே கேள்வி எழுப்பியுள்ளது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஏனைய உறுப்பு நாடுகள் இலங்கையில் மாநாடு நடத்தப்படுவதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். பிரதம நீதியரசர் பணி நீக்கம் செய்யப்பட்டமைக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகைக்கும் தொடர்பில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-2)

# துப்புரவு பணிகளில் மன்னார் பொலிஸார்

(மன்னார்)

மன்னார் நகரசபையும் மன்னார் பொலிஸ் நிலையமும் இணைந்து மன்னாரில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணியினை தற்போது மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் காலை மன்னார் உப்புக்குளம் பகுதியில் மக்களினால் சேமித்து வைக்கப்பட்டுள்ள கழிவுகளை அகற்றும் பணியினை மன்னார் பொலிஸார் மேற்கொண்டனர்.

இதன்போது மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஸங்க மற்றும் அமைச்சர் றிசாத் பதியுதீனின் பிரதிநிதியும் மன்னார் நகரசபையின் அரசதரப்பு உறுப்பினருமான என். நகுசீன் ஆகியோரும் இணைந்து குறித்த வேலைத்திட்டத்தினை மேற்கொண்டனர். (செ-2)

# அச்சுறுத்தலுக்குள்ளான சட்டத்தரணிகள் மகஜரில் கையொப்பமிட தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் கொலை அச்சுறுத்தல்களுக்கு எதிராக சட்டத்தரணிகள் மகஜர் ஒன்றை கையொப்பமிடத் தீர்மானித்துள்ளனர். நாடு தழுவிய ரீதியில் இந்த மகஜர் கைச்சாத்திடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இன்று முதல் இந்த மகஜரில் கையொப்பங்களை திரட்டும் நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பை வெளியிட்ட சட்டத்தரணிகளை இலக்கு வைத்து கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டத்தரணிகளான ஜயம்பதி விக்ரமரட்ன, எம்.ஏ.சுமந்திரன், ஜே.சீ.வெலியமுன, ரொமேஷ் டி சில்வா போன்ற சட்டத்தரணிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கொலை அச்சுறுத்தல்களுக்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் நாடு தழுவிய ரீதியில் மகஜர் ஒன்றில் கையொப்பங்கள் திரட்டப்படவுள்ளன. (செ-2)

# சவுதி பிரமுகர் வழங்கிய பணம் சவுதிக்கே திருப்பியனுப்பப்படும்

## ரிஸானாவின் பெற்றோர் ஏற்காவிட்டால்– ஹிஸ்புல்லா

சவுதி அரேபிய பிரமுகர் வழங்கிய பத்து இலட்சம் ரூபா பணத்தை ரிஸானா நபீக்கின் பெற்றோர் ஏற்றுக் கொள்ள மறுக்கும் பட்சத்தில் அப்பணம் திருப்பி அனுப்பப்படும் என்று பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கடந்த வாரம் விஜயம் செய்திருந்த சவுதி அரேபிய இளவரசரின் சட்ட ஆலோசகர் இலங்கை ஊடகங்களில் ரிஸானா நபீக்கின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பின்னர் இலங்கை மக்களின் உள்ளக் கிடக்கைகளை அறிந்து கொண்டு தனது சொந்தப் பணத்தில் 10 இலட்சம் ரூபாவை வழங்கியிருந்தார்.

ரிஸானா நபீக்கின் குடும்பத்தினருக்கு வழங்கும்படி கூறி அவர் அப்பணத்தை பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவிடம் கையளித்திருந்தார்.

இந்த நிலையில் சவுதி அரேபிய அரசாங்கமோ அல்லது அந்நாட்டு தனவந்தர்களோ வழங்கும் பணத்தை பெற்றுக்கொள்ளப் போவதில்லை என்று ரிஸானாவின் தாயார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளதாவது,

சவுதி இளவரசரின் சட்ட ஆலோசகர் தம்மிடம் கையளித்திருந்த பத்து இலட்சம் ரூபா பணத்தை வழங்குவதற்காக நேற்று முன்தினம் மூதூருக்கு செல்லவிருந்தேன். ஆனால், ரிஸானா நபீக்கின் தாயார் விடுத்திருந்த அறிவிப்பை அடுத்து தனது மூதூர் விஜயத்தை ஒத்தி வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-2)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் வேல்நம்பி அண்மையில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தினால் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கே.மீனாவிடமிருந்து பேராசிரியர் தி.வேல்நம்பி விருதைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

# பதியப்படாத தொலைபேசிகளுக்கு விரைவில் தடை விதிக்கப்படும்

## தொலைத்தொடர்பு ஆணைக்குழு பணிப்பாளர் தகவல்

(கொழும்பு)

பதிவு செய்யப்படாத தொலைபேசிகள் நாட்டினுள் கொண்டு வருவது முற்றாக தடை செய்யப்படும். இத்தகைய தொலைபேசிகளை கண்டுபிடிப்பதற்காக புதிதாக நவீன தொழில்நுட்ப கருவிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும். தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட இத்தகவலைத் தெரிவித்தார்.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்படும் கையடக்க தொலைபேசிகள் அனைத்தும் ஐ.எம்.ஈ.ஐ. இலக்கங்களுடன் தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும். எனினும் பெரும் எண்ணிக்கையான தொலைபேசிகள் சட்டவிரோதமாகவே நாட்டினுள் கொண்டு வரப்படுவதாக பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட சுட்டிக் காட்டினார்.

பதிவு செய்யப்படாத தொலைபேசிகள் நாட்டில் புழக்கத்தில் இருப்பதால் பாரிய பிரச்சினைகள் உருவாக ஏதுவாகின்றன. எனவே, இத்தகைய தொலைபேசிகளை கண்டு பிடிப்பதற்காக புதிய நடைமுறை ஒன்றை அறிமுகப்படுத்தவும் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

இதன்படி **Central EIR (Central Equipment Idintity Register)** என்ற பெயரில் உத்தேச வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இது தொடர்பாக தேவையான நவீன தொழில் நுட்ப உபகரணங்கள் இவ்வருட இறுதிக்குள் வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்படவுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்படும் இந்த அதி நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் ஊடாக குறித்த சட்ட விரோத தொலைபேசிகளின் சமிக்ஞைகள் மற்றும் அதன் செயற்பாடுகள் துண்டிக்கப்படும்.

இதன்மூலம் சட்ட விரோத தொலைபேசிகளின் பாவனையை முற்றாக கட்டுப்படுத்த முடியும் என்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட நம்பிக்கை தெரிவித்தார். (செ-11)

# பெண்கள் வெளிநாடு செல்வதை நிறுத்தக்கோரி கையெழுத்து வேட்டை

மூதூர் பீஸ்–ஹோம் நிறுவனத்தோடு இணைந்து மூதூரில் செயற்படும் மஜ்லிஸ் அஸ்–ஸூறா, உலமா சபை, கதீப்மார்கள் நலன்புரிச் சங்கம் மற்றும் தடயம் சமூக அபிவிருத்தி மையம் ஆகியன ஒன்றிணைந்து பணிப்பெண்களாக வெளிநாடு செல்வதை நிறுத்தக்கோரி கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டுள்ளன.

பெண்கள் வெளிநாடு செல்வதனால் ஏற்படுகின்ற சமூக சீரழிவுகளை தடுக்கும் வகையில் பணிப்பெண்களாக வெளிநாடு செல்வதனை நிறுத்தக்கோரி பத்தாயிரம் பேர்களின் கையெழுத்துடன் அரசாங்கத்திற்கு மகஜர் ஒன்றை அனுப்புவதற்காகவே பொது மக்களிடமிருந்து கையெழுத்துக்கள் பெறப்படுகின்றன.

பொதுமக்கள் கையெழுத்திடும் முயற்சியில் பெரும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதாக மஜ்லிஸ் அஸ் – ஸூறா தலைவர் மௌலவி எம்.எம்.கரீம் நத்வி தெரித்தார். (செ -2)

# இலங்கையின் அரசியல் யாப்பு திருத்தப்பட வேண்டும்!

## ஜனாதிபதியிடம் எம்.பிக்கள் கோரிக்கை

(கொழும்பு)

நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் பிரச்சினை ஏற்படாத வகையில் யாப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் புத்திஜீவிகளும் கோரியுள்ளதாக அரச வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

ஜனாதிபதியிடம் இது தொடர்பான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.


முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் விடயம் போல எதிர்காலத்திலும் நீதித்துறையினால் பிரச்சினை ஏற்பட்டு விடக்கூடாது என்ற அடிப்படையிலேயே இந்தக் கோரிக்கையை விடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

இதன் மூலம் நிறைவேற்று அதிகாரமும் நீதித்துறையும் உரிய வழிகளில் வரையறைக்குள் செயற்படமுடியும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (செ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் நம்பியார், பான் கீ மூன் உறவு...

# இலங்கை விடயத்தில் தாக்கம்







புதுடெல்லியில் 23 வயதான யுவதி ஒருவர், கூட்டாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதை எதிர்த்து கடந்த இரு வாரங்களாக பல்வேறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில், பெண்களைப் பாது காக்கவேண்டிய தேவை உள்ளதாக உலக நாடுகள் சிலவற்றின் தலைவர்கள் வலி யுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில், புதுடெல்லியில் இடம் பெற்ற பாலியல் வன்முறைச் சம்பவத் தில் பாதிக்கப்பட்ட யுவதிக்கு ஆதர வாக இலங்கையில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் இது தொடர்பில் ஐ.நா. செயலர் நாயகம் பான் கீ மூன் விடுத்துள்ள அறிக்கை தொடர்பான இவ்விரு செய்திகளும் ஆச்சரியப்படத்தக்கவை.

இலங்கையின் வடக்கு கிழக்கில் நாள் தோறும் பல்வேறு பாலியல் வன் முறைச் சம்பவங்கள் இடம்பெறுகின்ற போதிலும் அவை ஊடகங்களில் வெளி வருவதில்லை என்பதை இங்கு வலி யுறுத்த விரும்புகிறேன். ஆனால், இலங் கையில் புதுடெல்லி யுவதி மீதான பாலி யல் வன்முறை சம்பவத்திற்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற் றுள்ளன.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடு படுபவர்கள், தமது சொந்தநாட்டில் வாழும் தமிழ்ப்பெண்கள் மீதான பாலியல் மீறல்கள் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பில் பாராமுகமாக இருந்துகொண்டு, இந்திய மாகடலின் மறுபுறத்தே உள்ள நாடான இந்தி யாவில் இடம்பெற்ற பாலியல் வன் முறையை எதிர்த்து இதில் பாதிக்கப் பட்டவருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் செய்துள்ளமை வியப்பில் பலரையும் ஆழ்த்தியுள்ளது.

இந்தியா தனது பெண்களை பாது காக்க வேண்டும் என பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார். ஆனால், இந்தியா வுக்கு அயலிலுள்ள இலங்கையில் வாழும் தமிழ்ப்பெண்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் இவ்வாறான பாலியல் சித்திரவதைகள் தொடர்பில் ஐ.நா. செயலாளர் நாயகம் தனது கவனத்தைச் செலுத்த மறந்துவிட்டார்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் வரை யான கணவன்மாரை இழந்த பெண் களில் 90 ஆயிரம் பேர் போரின்போது தமது கணவன்மாரை இழந்தவர்களாவர். இவர்களுக்கு அரைவாசி எண்ணிக்கை யான பெண்கள் 40 வயதிற்கு குறைந்த வர்கள் என்பது மிகவும் வேதனைக் குரியதாகும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் வாழும் தமிழ்ப்பெண்கள், யுத்தம் முடிவுற்றபோதிலும் தொடர்ந்து பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்டு பாலியல் சித்திரவதைகளை அனுப விக்கிறார்கள் என்பதையும் வடக்கு கிழக்கானது இலங்கை இராணுவத்தால் ஆளப்படுவதால் இந்தப்பெண்கள் நாளாந்தம் எவ்வாறான துன்பங்களை அனுபவிக்கின்றனர் என்பதையும் இந்த உலகம் நன்கறியும்.

பாதிக்கப்பட்ட பெண்கள் இது தொடர்பில் வெளியில் தெரியப்படுத் துவதில் அச்சமடைகிறார்கள். மாறாக இது தொடர்பாக முறையீடு செய்தால் தாம் குற்றமிழைத்தவர்களால் தாக் குதலுக்கு உட்படுத்தப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே இலங்கை வடக்கு- கிழக்கில் நாளாந்தம் இடம் பெறும் பாலியல் வன்முறைகள் தொடர் பான செய்திகள் வெளியில் வருவ தில்லை. இவ்வாறு பாதிக்கப்படும் இந்தத் தமிழ்ப் பெண்களுக்காக குரல்கொடுக்க யார் முன்வருகிறார்கள்?

கடந்த ஆண்டில் கிறிஸ்பூதம் போன்ற சில வடிவங்களில் தமிழ்ப் பெண்கள் மீது பல்வேறு தாக்குதல் கள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் விடுதலைப்புலிகளின் முன்னாள் பெண்போராளிகள் மீதும் யுத்தத்தின் முடிவில் இவ்வாறான பல்பேறு தாக்குதல் சம்பவங்களை இலங்கை இராணுவப்படைகள் மேற்கொண்டன. ஆனால், இவை தொடர்பான செய்தி களை இந்த உலகம் நன்கறிந்த போதி லும்கூட இந்தப் பெண்களுக்காக குரல்கொடுக்கப்படவோ அல்லது பாதிக் கப்பட்டவர்களுக்கு ஆதரவாக ஆர்ப் பாட்டங்கள் மேற்கொள்ளப்படவோ இல்லை. அறிக்கைகளும் வெளியிடப் படவில்லை.

இடம்பெயர்ந்த முகாம்களில் வாழும் தமிழ்ப்பெண்கள் மற்றும் சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிச் சென்றுள்ள பெண்களுக்கான வீடமைப்பு, சுகாதார வசதிகள், நீர்வசதிகள், பொருத்தமான வேலைவாய்ப்புகள், கல்விவசதி போன்றன நிறைவு செய்யப்படவில்லை.

இவ்வாறு பாதிக்கப்பட்ட, குரல் கொடுக்க முடியாத தமிழ்ப்பெண்கள் எதிர்நோக்கும் துன்பங்கள் தொடர்பாக இலங்கையின் ஆளும் கட்சியிடம் பான் கீ மூன் ஏன் எந்தவொரு கேள்வியையும் எழுப்பவில்லை?

மே 2009 அதாவது இலங்கையில் உள்நாட்டுப்போர் இறுதிக்கட்டத்தை அடைந்தபோதும், தமிழீழ விடுதலைப் புலிகள் சரணடைய முன்வந்தபோதும் கூட, ஐ.நா. மற்றும் இதன் செயலாளர் நாயகம் விடுதலைப் புலிகளைப் பாது காப்பாக சரணடைய வைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக் காது அமைதிகாத்தற்கான காரணம் என்ன?

இறுதியுத்தத்தின்போது இலங்கை அரசாங்கத்திடம் விடுதலைப்புலிகளின் அரசியற்பிரிவுப் பொறுப்பாளர் சரண டைவதை தனிப்பட்ட ரீதியாக கண் காணித்துக் கொண்டிருந்த ஐ.நா. செய லாளர் நாயகத்தின் சிறப்புத் தூதரான விஜய் நம்பியார் இதில் தவறிழைத்ததை ஐ.நா.வல்லுனர் குழுவால் தயாரிக் கப்பட்ட அறிக்கையிலோ சுட்டிக்காட் டப்படவில்லை.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் சிறப்புத் தூதராகக் கடமையாற்றிய விஜய் நம்பியார், விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியற்பிரிவுப் பொறுப் பாளரிடம், இலங்கை அரசாங்கப்படை களிடம் சரணடைவதற்கு முன்னர் வெள்ளைக் கொடியை ஏந்திவருமாறு தனிப்பட்ட ரீதியாக அறிவுரை வழங் கியிருந்தார். இவ்வாறு சரணடைய முன்வந்த புலிகள் மற்றும் இவர்க ளுடன் பயணித்த பெண்கள் சிறார்கள் ஆகியோர் இறுதியில் மிகக்கொடூரமா கப் படுகொலை செய்யப்பட்டனர். இந் தச் சம்பவத்தை காலம்சென்ற பிரபல ஊடகவியலாளரான மேரி கொல்வின் பதிவு செய்திருந்தார்.

இவ்வாறான ஒரு மிகப்பெரிய தவறிழைத்த பின்னரும்கூட நம்பியார் தொடர்ந்தும் ஐ.நா. செயலாளர் நாய கத்தின் சிறப்புத் தூதராகக் கடமை யாற்றுகிறார். இவர் ஒருபோதும் இலங்கையின் யுத்த வலயத்திற்கு செல்லவில்லை. விஜய் நம்பியாருக்கும் பான்கீ மூனுக்கும் இடையில் 40 ஆண்டு கால உறவு காணப்படுவதாக கூறப் படுகிறது.

விஜய் நம்பியாரின் மூத்த சகோத ரரான ஓய்வு பெற்ற ஜெனரல் சற்றீஸ் நம்பியார் இலங்கை அதிபரின் பாது காப்பு ஆலோசகராக கடமையாற்றி யிருந்தார். இந்தக் காரணத்தைக் கொண்டு இந்தியாவின் செல்வாக்குடன் விடுதலைப்புலிகள் சரணடைவதில் விஜய் நம்பியார் தனிப்பட்ட ரீதியாக பங்களித்திருக்க முடியும். எது எவ் வாறாயினும், இது தொடர்பில் விசா ரணை செய்யப்பட வேண்டிய தேவை யுள்ளது.

ஐ.நா.செயலாளர் நாயகமாக பான் கீ மூன் நியமிக்கப்படுவதற்கு இலங்கை தனது ஆதரவை வழங்கியிருந்தது. அத்துடன் ஐ.நா. செயலாளர் நாயகத் தின் மருமகன் தமிழர் எதிர்ப்புக் கொள்கைளை உடையவர். இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டபோது பான் கீ மூனின் மருமகன் பெற்றுக்கொண்ட கசப்பான அனுபவங்கள் மற்றும் இவரது கடந்த கால ஆக்கங்கள் போன்றவற்றின் மூலம் இவர் தமிழர் எதிர்ப்புக் கொள்கையை உடையவர் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

இந்நிலையில், பான் கீ மூன், தமிழ் மக்கள் தொடர்பான சில தீர்வுகளை எட்டுவதில் இவரது மருமகனின் கருத் துக்களும் பெருமளவில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

லிபியா, எகிப்பு மற்றும் சிரியா போன்றவற்றுடன் ஒப்பிடும்போது, இலங்கை விடயத்தில் ஐ.நா.வால் எடுக் கப்படும் நடவடிக்கைகளில் இரட்டை நிலப்பாடு காணப்படுவதை அனைத் துலக சமூகம் புரிந்துகொள்ள முடியும்.

இலங்கை இராணுவத்தால் யாழ்ப் பாண பல்கலைக்கழக மாணவர்கள் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டு, சில மாணவர்கள் இன்னமும் சிறையில் அடைக்கப்பட்டதை எதிர்த்து அனைத் துலக நாடுகள் தமது விசனங்களை முன்வைத்தபோது, இது தொடர்பில் ஐ.நா. எவ்வித அறிக்கையையும் வெளி யிடாதது ஏன்?

தமிழ் மக்களின் விவகாரம் தொடர் பில் தொடர்ந்தும் பான்கீமூன் அமைதி காப்பதானது இது தொடர்பில் ஐ.நா. மற்றும் பான் கீ மூன் நடவடிக்கைகளை எடுக்க முன்வரவில்லை என்பதைக் காட்டுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மற்றும் யுத்தகால மீறல்கள் தொடர்பாக சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐ.நா.வல்லுனர் குழு, அனைத்துலக சமூ கம் மற்றும் மனித உரிமை அமைப்புகள் கோரிய போதிலும்கூட, தனியொரு குடும்பத்தால் நிர்வகிக்கப்படும் இலங் கையின் இராஜபக்ச அரசாங்கமானது இதனை முற்றாக மறுத்திருந்தது. ,

தமிழ் மக்கள் மீதான இனப்படு கொலையானது சிங்கள மயமாக்கல், இராணுவ மயமாக்கல், பொருளாதார புறக்கணிப்புகள் போன்ற பல்வேறு வித்தியாசமான வடிவங்களில் தொடர்ந் தும் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றை சீர்ப்படுத்தி இலங்கையில் பயனுள்ள பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்காக அனைத்துலக சமூகத்தால் எடுக்கப் பட்ட அனைத்து முயற்சிகளும் தோல் வியுற்றுள்ளன. தற்போதைய இலங்கை, ஆளும் அரசாங்கத்தை ஒரு வழிக்கு கொண்டுவருவதில் அனைத்துலக சமூ கம் தோல்வியுற்றுள்ளது. யுத்தம் முடி வடைந்து மூன்றரை ஆண்டுகள் கடந்த நிலையிலும் யுத்தக் குற்றவாளிகள் சுதந்திரமாக திரிகின்றனர்.

21 ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற மிகமோசமான இனப்படுகொலையை சிங்கள இராணுவத்தினர் மேற்கொண் டுள்ளனர். இந்த இனப்படுகொலையில் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

தமிழ் மக்களின் உரிமைக்கு ஆதரவாக மனித உரிமை அமைப்புக ளால் முன்னெடுக்கப்படும் நடவடிக் கைகளை ஐ.நாவின் 99வது சாசனத்தைப் பயன்படுத்தி பான் கீ மூன் , அனைத் துலக சுயாதீன விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கான கட்டளையை வழங்க முடியும். அத்துடன் இலங்கை மீதான சுயாதீன விசாரணை அறிக் கையை பாதுகாப்பு சபை மற்றும் பொதுச்சபை ஆகியவற்றின் பார்வைக் காக வழங்குவதற்கான கட்டளையை பான் கீ மூன் வழங்க முடியும்.

இதன் மூலம் யார் குற்றவாளிகள் என்பதை இந்த உலகம் தீர்மானிக்க முடியும். இதன் மூலம், தான் விட்ட எல்லாத் தவறுகளுக்கும் ஐ.நா. தானா கவே பரிகாரம் தேடமுடியும். ஐ.நா. மற்றும் பான் கீ மூன் போன்றோர் நீதிக்காக குரல் கொடுக்க வேண்டிய வர்களேயன்றி, இவர்கள் இரங்க வேண்டியவர்கள் அல்ல என்பதை வரலாறு நினைவுபடுத்துகிறது.

**போல் நியூமன்**
*கொழும்பு ரெலிகிறாஃவ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மனித சமூக நலன்களைப்பேண உலக பொருளாதாரம் மாற வேண்டும்-ஒக்ஸ்பாம்

(கொழும்பு)

உலகின் முதல் 100 பணக்காரர்களின் கடந்த வருட வருமானம் உலகில் உள்ள ஏழைகளின் மோசமான வறுமையை ஒழிக்க தேவையான பணத்தை விட நான்கு மடங்கு அதிக மாகும் என்று ஒக்ஸ்பாம் தொண்டு நிறுவனம் கூறியுள்ளது.

உலக பொருளாதார முறைமையில் மாற்றம் செய்ய வேண்டிய தருணம் இது என்று ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் தலைமை இயக்குநரான பார்பரா ஸ்டோக்கிங் கூறியுள்ளார்.

கடந்த வருடத்தில் உலகின் முதல் 100 பணக்காரர்களின் மொத்த வருமானம் 240 பில்லியன் டொலர்கள் எனவும் குறித்த நிறுவனம் கூறியுள்ளது. அதற்கு மாறாக உலகில் மிகவும் மோசமான வறுமையில் இருக்கும் மக்கள் ஒரு நாளைக்கு ஒன்றேகால் டொலருக்கும் குறைவான பணத்தில் வாழ்வதாகவும் அது கூறியுள்ளது.

ஒரு சிலர் கைகளிலேயே எல்லா பணமும் போய் குவிவது வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒரு தடையாக இருந்து கொண்டிருக்கின்றது என்று அடுத்த வாரம் சுவிசில் ஆரம்பாகவிருக்கும் உலக பொருளாதார மாநாட்டின் முன்னோடியாக நடந்த சந்திப்பு ஒன்றில் ஒக்ஸ்பாம் கூறியுள்ளது.

உலகின் ஏற்றத்தாழ்வை ஒழிக்க உலகத் தலைவர்கள் ஸ்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

அளவுக்கு அதிகமான செல்வம் என்பது பொருளாதார ரீதியான செயற்றிறன் இன்மையையும் சமூக ரீதியான பிளவையும் காட்டுகிறது என்று குறித்த அமைப்பு கூறியுள்ளது.

அனைத்து மனித சமூகத்தின் நலனுக்காக உலக பொருளாதார முறைமையில் மாற்றம் வரவேண்டும் என்று அது கூறியுள்ளது.

உலக சனத்தொகையில் ஒரு வீதமான செல்வந்தர்கள் கடந்த 20 வருடங்களில் தமது வருமானத்தை 60 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் பிரித்தானியாவை தளமாகக் கொண்ட ஒக்ஸ்பாம் கூறியுள்ளது.

உலக வரி முறைமைகளில் மாற்றம் செய்யப்படுவதுடன் இலவசமான பொதுச் சேவைகளிலும் சுகவீனமுற்றவர்கள் மற்றும் வேலையற்றவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் அதிக முதலீடு செய்யப்பட வேண்டும் என்றும் ஒக்ஸ்பாம் உலக நாடுகளின் தலைவர்களுக்கு பரிந்துரை செய்துள்ளது.

உலக நாடுகளின் தலைவர்கள் தமது மட்டத்தில் முதலில் ஏற்றத்தாழ்வை சரி செய்ய வேண்டும் என்றும் வரி ஏய்ப்பு, பலவீனமான வேலைவாய்ப்பு போன்றவற்றுக்கு தீர்வு காண வேண்டும் என்றும் ஒக்ஸ்பாம் வலியுறுத்தியுள்ளது. (2-9)

# தந்தி முறைமை விரைவில் நிறுத்தம்

இலங்கையில் மிக நீண்ட காலமாக பயன்பாட்டில் உள்ள மின் தந்தி முறைமை இரத்து செய்யப்படவுள்ளது.

இரத்து செய்வது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மின் தந்திகளை அனுப்புவதனால் தபால் திணைக்களத்திற்கு பாரியளவில் நட்டம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே தொடர்ந்தும் நட்டத்தில் இவ்வாறான தந்திச் சேவையை வழங்க முடியாது என தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் மின்தந்திச் சேவை இரத்துச் செய்யப்படவுள்ளது. மின் தந்தி சேவையை வழங்குவதற்காக தொலைத் தொடர்பு கட்டுப்பாட்டு நிறுவனத்திடம் இந்த ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தை தபால் திணைக்களம் பெற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (2-9)

# அமைச்சு பதவிகளில் விரைவில் மாற்றம்

(கொழும்பு).

இலங்கை அமைச்சரவையில் எதிர்வரும் வாரங்களில் மாற்றங்கள் ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய சில அமைச்சுப் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. பொதுநிர்வாகம் , மின்வலு மற்றும் எரிசக்தி, பெற்றோலிய வளம் உள்ளிட்ட சில அமைச்சுப் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

இந்த அமைச்சுப் பதவிகள் மாற்றம் தொடர்பில் அண்மைக்காலமாக செய்திகள் வெளியாகி வந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இம்முறை நிச்சயமாக அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (2-9)

# பாதாள உலகச் செயற்பாடுகள் முழுமையாக இல்லாதொழிக்கப்படும்

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

பாதாள உலகச் செயற்பாடுகள் முற்று முழுதாக இல்லாதொழிக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர் காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பாதாள உலகச் செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்கு புதிய செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும். இந்த செயற்றிட்டத்தை முன்னெடுக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமானது.

பாதாள உலகச் செயற்பாடுகள் குறித்து பொதுமக்கள் தகவல்களை வழங்கினால் செயற்பாடுகளை இல்லாதொழிக்க முடியும். பாதாள உலகச் செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

பாதாள உலகக் குழுக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் அரசியல்வாதிகளுக்கு எதிராக தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (2-9)

# தொலைபேசிகள், போதைப்பொருட்கள் சிறைச்சாலைகளில் மீட்பு

மொனராகலை,குருவிட்ட ஆகிய சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையில் கைதிகளால் சட்டவிரோதமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

இதற்கமைய மொனராகலை சிறையில் இருந்து ஒரு கையடக்கத் தொலைபேசியும் குருவிட்ட சிறையில் இருந்து 6 கையடக்கத் தொலைபேசிகளும் போதைப்பொருள் பொதிகள் நான்கும் மீட்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் இவ்வாறு திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-9)




★1643-ஏபல் டாஸ்மான் தொங்காவில் இறங்கிய முதல் ஐரோப்பியர் ஆனார்.

★1793-பிரான்சின் பதினாறாம் லூயி மன்னன் அரசுத்துரோகக் குற்றச்சாட்டுக்களுக்காக மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டான்.

★1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜெபர்சன் டேவில் ஐக்கிய அமெரிக்காவின் செனட்டில் இருந்து விலகினார்.

★1924-சோவியத் தலைவர் விளாடிமீர் லெனின் இறந்தார்.

★1925-அல்பேனியா குடியரசாக அறிவிக்கப்பட்டது.

★1941-இரண்டாம் உலகப் போர்: அவுஸ்திரேலிய மற்றும் பிரித்தானியப் படைகள் லிபியாவின் டோபுருக் நகரைத் தாக்கின.

★1947-முதலாவது சிங்களத் திரைப்படம் (கடவுணு பொரன்டுவ) திரையிடப்பட்டது.

★1954-உலகின் முதலாவது அணுசக்தியாலான நீர் மூழ்கிக் கப்பல் USS நோட்டிலஸ், ஐக்கிய அமெரிக்காவில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

★1960-மேர்க்குரி விண்கலத்தில் சாம் என்ற பெண் குரங்கு விண்வெளிக்குப் பயணமானது.

★1972-திரிபுரா, மேகாலயா, மணிப்பூர் ஆகியன இந்தியாவின் தனி மாநிலங்களாக்கப்பட்டன.

★2004-நாசாவினால் செவ்வாய்க் கோளுக்கு அனுப்பப்பட்ட ஸ்பிரிட் தளவுளவியின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. எனினும் இது பூமியில் தன்னியக்க முறையில் திருத்தப்பட்டு பெப்ரவரி 6 இல் தொடர்புகள் மீண்டும் பெறப்பட்டன.

★2008-அலாஸ்காவின் இயாக் மொழி பேசும் கடைசி பழங்குடி இறந்தார்.

### பிறப்புக்கள்

★1912- கொன்ராட் எமில் புளொக், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.2000)

★1953-பால் ஆலன், மைக்ரோசொப்ட் நிறுவனர்களில் ஒருவர்.

★1963- அகீம் ஒலாஜுவான், நைஜீரியக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★1924-விளாடிமிர் லெனின், மார்க்சியப் புரட்சியாளர் (பி.1870)

★1989-சு.வித்தியானந்தன், ஈழத்துத் தமிழறிஞர், பேராசிரியர்

★2002-சொக்கலிங்க பாகவதர், தமிழ் திரைப்பட நடிகர்

### சு.வித்தியானந்தன்



சு.வித்தியானந்தன் ஈழத்தின் ஒரு சிறந்த கல்வியாளரும் ஆய்வாளரும் தமிழறிஞரும் ஆவார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத்தலைவராகவும் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணிபுரிந்தவர்.

#### வாழ்க்கைக் குறிப்பு

நண்பர்களாலும் அவரது மாணவர்களாலும் வித்தி என அழைக்கப்பட்ட பேராசிரியர் யாழ்ப்பாண மாவட்டத்தின் தெல்லிப்பழையில் வழக்கறிஞரான சுப்பிரமணியத்தின் மகனாகப் பிறந்தார். தாயார் பெயர் முத்தம்மா. வீமன்காமம் அவரை வளர்த்தெடுத்த ஊர்.

இவர் தெல்லிப்பழை ஒன்றியக் கல்லூரி, பரியோவான் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகம், லண்டன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கற்றுத் தேர்ந்தவர் வித்தி. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சுவாமி விபுலானந்த அடிகள், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஆகியோர் இவரது ஆசிரியர்களாகத் திகழ்ந்தனர். இங்கு தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்று கலைமாணி, முதுகலைமாணி ஆகிய பட்டங்களைப் பெற்ற முதலாமவர் இவராவார். தனது 26 ஆவது வயதில் லண்டனில் முனைவர் பட்டம் பெற்றார்.

#### துணைவேந்தர்

1977 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் யாழ்ப்பாண வளாகத்தின் தலைவரானார். அதன் பின்னர் ஜனவரி 1979 இல் அவ்வளாகம் பல்கலைக்கழகமான போது அதன் முதலாவது துணைவேந்தரானார்.

#### இறுதி நாட்கள்

யாழ்ப்பாண வளாகத் தலைவராகவும் தொடர்ந்து மும்முறை யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் செயலாற்றிய பேராசிரியருக்கு நான்காம் முறையும் அப்பதவி அளிக்கப்பட்டபோது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தோடு முரணுறும் துயரையும் சந்தித்தார். 1989 இல் அவர் மறைந்தார்.

#### நினைவு வெளியீடுகள்

அவரது நினைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகம் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூலகம் என்று பெயரிடப்பட்டது. இலங்கை அஞ்சல் திணைக்களம் 1997 நவம்பர் 11 அன்று வித்தியானந்தனின் அஞ்சல் தலையை வெளியிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் எல்லைப் பிரச்சினைக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் நேரடிப் பேச்சு

## அமெரிக்கா வரவேற்பு



காஷ்மீர் எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிக்க இந்தியாவும் பாகிஸ்தானும் நேரடி பேச்சுவார்த்தைக்கு முனைந்திருப்பதை வரவேற்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

ஜம்மு- காஷ்மீர் எல்லையில் இந்தியா-பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் தாக்குதல்களில் ஈடுபடுவது சமீபத்தில் அதிகரித்திருக்கிறது. இது எல்லையில் பதற்றத்தை உருவாக்கியுள்ளது. சுமுக நிலையை ஏற்படுத்த இரு நாடுகளும் பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளன.

இந்நிலையில் அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நுலண்ட் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது,

எல்லையில் இந்தியா, பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் தாக்குதலில் ஈடுபடும் பிரச்சினைக்கு இரு நாடுகளும் இணைந்து தீர்வு காண முயற்சிப்பதே சிறந்த வழி என நாங்கள் கருதுகிறோம். குறித்த பிரச்சினை தொடர்பாக தற்போது இரு நாடுகளும் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளன. இந்த நடவடிக்கையை நாங்கள் வரவேற்கிறோம்.

இரு நாடுகளுக்கு இடையே பொருளாதார உறவு, வர்த்தக உறவு, விசா வழங்குவது போன்ற விடயங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆனால், இந்த நடவடிக்கைகள் சீர்கெடுவதை நாங்கள் விரும்பவில்லை என்று தெரிவித்தார். (செ-2)

# பராக் ஒபாமா இன்று மக்கள் முன் பதவியேற்கிறார்

## மரபுப்படி நேற்றே தலைமையேற்றார்



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் இரண்டாம் முறையாக போட்டியிட்டு வெற்றிபெற்ற பராக் ஒபாமா இன்று திங்கட்கிழமை பொதுமக்களின் முன்னிலையில் நடைபெறும் விழாவில் இரண்டாவது முறையாகப் பதவி ஏற்றுக் கொள்ளவுள்ளார். அமெரிக்க அரசியலமைப்பு சட்டத்தின்படி நேற்றையதினம் பதவி ஏற்க வேண்டும். அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமையாக இருப்பதால் முக்கியமான அரசு அலுவலகங்கள் எதுவும் இயங்காது.

எனவே, அரசியலமைப்பு சட்டத்தின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் நேற்றைய தினம் மரபுகளின்படி ஒருமுறை பதவி ஏற்றுக் கொள்ளும் ஒபாமா இன்று திங்கட்கிழமையும் இரண்டாவது முறையாக பதவி ஏற்றுக் கொள்வார். பதவி ஏற்பு விழாவில் பங்கேற்க வெளிநாடுகளில் இருந்து முக்கிய அழைப்பாளர்கள் வோஷிங்டனில் குவியத் தொடங்கியுள்ளனர்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகள் ஆபிரகாம் லிங்கன், மார்ட்டின் லூதர்கிங் ஆகியோரது பதவியேற்பு விழாக்களில் பயன்படுத்தப்பட்ட பைபிள்களை சாட்சியாக வைத்து ஒபாமா பதவி ஏற்றுக் கொள்கின்றார். அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ராபர்ட்ஸ் ஒபாமாவுக்கு இருமுறையும் பதவி பிரமாணம் செய்து வைக்கின்றார்.

இதற்கு முன்னரும் அமெரிக்க ஜனாதிபதிகளாக பொறுப்பேற்றுக் கொண்ட டுவைட் ஈசன் ஹோவர், நடிகர் ரொனால்ட் ரீகன் ஆகியோர் இதேபோன்று இருமுறை பதவி ஏற்றுக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-2)

# வெளிநாட்டைச் சேர்ந்தவர்களுக்கு ஐந்து ஆண்டு கால விசா!

## வழங்க முடிவு செய்தது சீனா

(பீஜிங்)

வெளிநாட்டைச் சேர்ந்த, திறமை வாய்ந்தவர்களுக்கு, சீன அரசு, ஐந்தாண்டு கால விசா வழங்க முடிவு செய்துள்ளது.

சீனாவில் வெளிநாடுகளைச் சேர்ந்த 5.5 இலட்சம் பேர் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு தற்போது ஓராண்டு விசா வழங்கப்படுகிறது. இவற்றை ஆண்டுதோறும் புதுப்பிக்க வேண்டிய நிலை உள்ளது. இந்த நடைமுறையை மாற்றி, திறமையானவர்களுக்கு ஓராண்டு விசாவுக்கு பதிலாக ஐந்தாண்டு விசா வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து சீனாவின் வெளியுறவு விவகாரத்துறை இயக்குநர் ஜாங்க் ஜியாங்கியோ கூறியதாவது, சீனாவில் தற்போது வெளிநாட்டினருக்கு வழங்கப்பட்டு வரும், ஓராண்டு கால விசாவுக்குப் பதிலாக, ஐந்தாண்டு கால விசா வழங்குவது குறித்து ஐந்து அமைச்சர்களை கொண்ட குழு ஆய்வு செய்து அனுமதி வழங்கப்படும். தற்போது சீனாவில் உள்ள 5.5 இலட்சம் வெளிநாட்டவர்களில் ஏராளமானவர்கள் விசாவை புதுப்பிக்க விண்ணப்பித்துள்ளனர். மேலும் பல்நோக்கு விசா வழங்குவது குறித்தும் அரசு ஆலோசித்து வருகிறது என அவர் கூறினார். (செ-2)

# உலக தரிசனம்

# பேஸ்புக்கில் கொலை வீடியோ வெளியிட்டவர் கைதானார்!

(லண்டன்)

தலைகளை வெட்டி கொல்லும் வீடியோ காட்சியை பேஸ்புக்கில் வெளியிட்ட லண்டன் நபருக்கு 5 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

லண்டன் பிரஸ்டோன் நகரை சேர்ந்த ஒருவர் தனது பேஸ்புக்கில் பிணை கைதிகளின் தலையை தீவிரவாதிகள் துண்டிக்கும் காட்சிகள் அடங்கிய வீடியோவை கிரெய்க் தனது பேஸ்புக்கில் வெளியிட்டார்.

தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸார் ஒன்லைனில் உள்ள வீடியோ, மெசேஜ்களை தொடர்ந்து ஆய்வு செய்த போது இதை கண்டுபிடித்தனர்.

இதையடுத்து கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கிரெய்க்கை கைது செய்து வழக்கு தொடர்ந்தனர். தீவிரவாதத்தை ஊக்குவித்து தடை செய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருந்தது உட்பட 4 பிரிவுகளின் கீழ் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. விசாரணையின் போது இவற்றை கிரெய்க் ஒப்புக் கொண்டார். இதையடுத்து 5 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (செ-2)

# பாதரசத்தின் பயன்பாட்டைக் குறைக்க 140 நாடுகள் சம்மதம் தெரிவிப்பு

உடலுக்குக் கேடு விளைவிக்கும் பாதரசத்தின் பயன்பாட்டைக் குறைக்க 140 நாடுகள் சம்மதம் தெரிவித்துள்ளன. சுவிட்சர்லாந்தில் கடந்த ஒரு வாரமாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைக்குப்பின் இம்முடிவு எட்டப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் நேற்று முன்தினம் அறிக்கையில் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

பாதரசம் போன்று கனமான பொருட்களில் இருந்து வெளியேறும் நச்சுப் பொருட்கள் மனிதர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனைக் குறைப்பதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கம். ஜப்பானின் மினமடா நகரில் இது தொடர்பான ஒப்பந்தத்தில் இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் கையெழுத்திட பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பாதரசத்தினால் அதிகம் பாதிப்படைந்த ஜப்பானின் மினமடாவை நினைவுகூரும் வகையில் அங்கு கையெழுத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எலக்ட்ரிகல் ஸ்விட்சுகள், முகத்துக்குப்பூசும் கிரீம் உள்ளிட்டவற்றில் பாதரசம் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் சிறுதொழில் தங்க சுரங்கப் பணிகளில் மற்றும் சீமெந்து உற்பத்தி உள்ளிட்டவற்றில் இருந்து அதிகளவு பாதரசம் கழிவாக வெளியிடப்படுகின்றன.

பாதரசத்தினால் மனநல பாதிப்பு, செரிமானக்கோளாறு, இதயம், மூளை, நரம்பு மண்டலம், சுவாசக் கோளாறுகள் உள்ளிட்ட பாதிப்புகள் மனிதர்களுக்கு ஏற்படுகின்றன. இது கருவிலிருக்கும் குழந்தைகளுக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது என கூறியுள்ளார். (செ-2)

# அமெரிக்க விமான நிலையங்களில் நிர்வாண பரிசோதனைக்கு தடை!

அமெரிக்க விமான நிலையங்களில் எதிர்வரும் ஜுன் மாதம் தொடக்கம் நிர்வாண பரிசோதனைக்கு தடை விதிக்கப்படுகிறது.

பாதுகாப்பு காரணங்களை கருதி அமெரிக்காவில் உள்ள விமான நிலையங்களில் அதி நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய ஸ்கேன் எந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. விமான பயணிகளை நிர்வாண பரிசோதனை செய்து வெடி பொருட்களை மறைத்து எடுத்து செல்கின்றரா? என்பதை தெரிவிக்கின்றன. இது பயணிகளுக்கு பலவழிகளில் அசௌகரியத்தை ஏற்படுத்தியது. இதனால் அதற்கு கடும் எதிர்ப்பும் கிளம்பியது.

எனவே, இந்த முறையை மாற்றியமைக்க அமெரிக்கா அரசு முடிவு செய்தது. அதையடுத்து அந்த ஸ்கேன் எந்திரத்தில் பரிசோதிக்கப்படுபவரின் நிர்வாண உருவம் பதிவாகாத வகையில் கணனி மென்பொருளை மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கு பாராளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதை தொடர்ந்து எதிர்வரும் ஜுன் மாதம் முதல் அமெரிக்க விமான நிலையங்களில் நிர்வாண பரிசோதனை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. (செ-2)

# துப்பாக்கி கட்டுப்பாடு சட்டம் நியூயோர்க்கில்

அமெரிக்காவில் துப்பாக்கி கட்டுப்பாடு சட்டம் நியூயோர்க் மாகாணத்தில் முதல் முறையாக அறிமுகப் படுத்தப்படுகிறது.

அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் அப்பாவிகள் பலர் பலியாவது அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் துப்பாக்கி கலாசாரத்தை தடுக்க கடுமையான சட்டம் கொண்டு வர நியூயோர்க் மாகாண சட்ட சபை முடிவு செய்துள்ளது.

இதன்படி குறிப்பிட்ட சிலர் மட்டுமே துப்பாக்கியை வைத்துக் கொள்ளவும் மற்றவர்கள் துப்பாக்கியை கையாள்வதற்கு தடை விதிக்கும் மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமெரிக்கா முழுவதும் இதுபோன்ற சட்டத்தை அமுல்படுத்த ஜனாதிபதி ஒபாமா சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

# எகிப்து ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நீதிமன்றம் பொது மன்னிப்பு

(கெய்ரோ)

எகிப்து பொலிஸாருடன் மோதிய 379 ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. எகிப்தில் நடைபெற்று வந்த இராணுவ ஆட்சியை திரும்பப் பெற்று ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கெய்ரோவில் உள்ள தாஹிர் சதுக்கம் அருகே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 2 வாரம் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையில் மோதல் வெடித்தது. பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 42 பேர் பலியாகினர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 379 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது கெய்ரோ நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையின் போது எகிப்து ஜனாதிபதி முஹம்மது மோர்சி, குற்றம் சாட்டப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கியுள்ளதால் வழக்குகளில் இருந்து 379 பேரையும் விடுவிக்கின்றேன் என நீதிபதி கமால் எட்டின் ருஷ்டி தீர்ப்பளித்தார். (செ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பதுக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் பழுதடைந்த நிலையில் மீட்பு

## களஞ்சியசாலைக்கு சீல் வைப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்காக அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு உலர் உணவுப் பொருட்களில் ஒரு தொகுதி பொருட்கள் மக்களுக்கு விநியோகிக்கப்படாத நிலையில் மன்னார் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் களஞ்சிய சாலையில் பதுக்கி வைக்கப்பட்டு மிகவும் பழுதடைந்த நிலையில் நேற்று முன்தினம் மீட்கப் பட்டுள்ளது.

குறித்த களஞ்சியசாலை தற்போது சுகாதாரமற்ற முறையில் காணப்படுவதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி ஒருவர் சீல் வைத்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. குறித்த பொருட்கள் மன்னார் மாவட்ட செயலகத்தினால் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய அளவு நிவாரணங்கள் வழங்கப்படவில்லைஎன பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்திருந்தனர்.


இந்த நிலையில் மக்களுக்கு வழங்க வைக்கப் பட்டிரு ந்த ஒரு தொகுதி உலர் உணவுப் பொருட்களான அரிசி, மா, சீனி, உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், நெத்தலிக்கருவாடு போன்றவை மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அதிகாரியினால் மன்னார் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பொருட்கள் வைக்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் எந்த அதிகாரிகளும் பொருட்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையில் மூடியிருந்த குறித்த களஞ்சியசாலையில் இருந்து சில நாட்களாக துர்நாற்றம் வீசி வந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரி தலைமையிலான குழுவினர் அவற்றை அவ்விடத்தில் இருந்து அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் குறித்த பொருட்கள் கொட்டுவதற்காக கொண்டு செல்லப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு மன்னார் பொலிஸார், இராணுவம், மன்னார் நகர சபைத் தலைவர், உறுப்பினர்கள், மன்னார் பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி, மன்னார் பிரஜைகள், குழுவின் தலைவர் உட்பட பலர் பிரசன்னமாகியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மன்னார் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் களஞ்சியசாலை திறக்கப்பட்டு பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் பார்வையிட்ட போது உலர் உணவுப் பொருட்கள் பழுதடைந்து அழுகிய நிலையில் காணப்பட்டது.



குறித்தகளஞ்சியசாலையில்உள்ளஏனைய பொருட்களும் பழுதடையும் நிலையில் காணப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-2)

## மின் தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் 24 மெகாவோட்ஸ் புதிய மின் திட்டத்தை மின்வலையமைப்புடன் இணைப்பதற்காகவும் பின்வரும் பிரதேசங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை கரணவாய் அண்ணா சிலையடிப் பிரதேசத்திலும் மருதங்கேணி முதல் குடத்தனை வரையான பிரதேசம், வாதரவத்தை, வீரவாணி, புத்தூர் ஆவரங்கால், நிலாவரை ஆகிய இடங்களிலும் நாளை செவ்வாய்க்கிழமை மற்றும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை ஆகிய தினங்களில் குஞ்சர் கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலி கண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி மருதங் கேணி, உரும்பிராய், ஊரெழுப் பிரதேசத்தின் ஒருபகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (செ-9)

# டெங்கு ஒழிப்பு வாரம் தேசிய ரீதியில் மீண்டும் பிரகடனம்

(கொழும்பு)

டெங்கு தொற்று வீதம் அதிகரித்து காணப்படுவதால் மீண்டும் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதியில் இருந்து 13ஆம் திகதி வரையில் இந்த டெங்கு ஒழிப்பு வாரம் அமுல் படுத்தப்படவுள்ளது.

எந்த வருடத்திலும் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் டெங்கு தொற்றுவீதம் அதிகரித்து காணப்படுவதே இதற்கான காரணம் என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் தற்போது நிலவும் வெள்ளப் பெருக்கு காரணமாகவும் டெங்கு தொற்று அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனடிப்படையிலேயே புதிய ஆண்டில் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப் படுத்தப்படவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (செ-2

# சரத் என். சில்வா மகிந்தவுடன் கைகோர்த்துள்ளார்- சிங்கள இணையம்

இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவை தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்குள் உள்வாங்கி அவருக்கு நீதியமைச்சுப் பொறுப்பு வழங்கப்படவுள்ளதாக சிங்கள இணையம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அரசுடனும் முரண்பட்ட நிலையில் காணப்பட்ட இவர் அண்மையில் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

அவரது பதவி நீக்கத்தை நியாயப்படுத்தியதுடன் நீதிமன்றத்தை விட பாராளுமன்றத்துக்கே அதிகாரங்கள் உள்ளன என்றும் கூறியிருந்தார்.

இதனையடுத்தே அவருக்கான வெகுமதியாக மகிந்த அரசு எம்.பி பதவியையும் அமைச்சுப்பொறுப்பையும் வழங்கவுள்ளது.

அத்துடன் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கை அரச தரப்புக்கு சரத் என்.சில்வாவே தலைமைதாங்கவுள்ளார்என்றும் அந்தசிங்கள இணையம் மேலும் தெரிவித்துள்ளது. (செ-2)

## வலுவூட்டல் கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

சித்தன்கேணி விதாதா வள நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் சுய தொழில் வலுவூட்டல் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பனிப்புலம் அம்பாள்சனசமூகநிலையத்தில் இடம்பெறுகிறது.

இவ்வலுவூட்டல் கருத்தரங்கில் விதாதா வள நிலைய கூட்டிணைப்பாளர் கு.புவராசா மற்றும் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொள்கின்றனர்.

சுயதொழில் முயற்சியுடையோர், சுய தொழில் செய்யும் ஆர்வம் உடையோர் அனைவரும் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டுபயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (செ-80)


## இலவச சிங்கள, ஆங்கில இரண்டாம் மொழி கற்கை நெறிகள்

எமது நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட இருக்கும் சிங்கள, ஆங்கில மொழிகளுக்கான வகுப்புகள் பெப்ரவரி 2 ஆம் திகதியில் இருந்து கீழ்க்காணும் நகரங்களில் ஆரம்பிக்கப்பட இருப்பதால் இல-29 ,பழம் வீதி,யாழ்ப்பாணம், A9 வீதி, கல்லடி மோட்டு, சாவகச்சேரி, சுன்னாகம், நெல்லியடி ஆகிய நகரங்களில் இரண்டாம் மொழியாகிய சிங்கள மொழி, ஆங்கிலமொழி கற்க விரும்புபவர்கள் எமது தலைமைக் காரியாலயமாகிய இல.29, பழம் வீதி,கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் ஜனவரி 29 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் G.C.E O/L க்கு மேல் பட்டதாரிகள் வரை விண்ணப்பிக்கலாம். இந்த வயதுக்கு இடைப்பட்டவர்களிடம் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. விசேட ஆங்கில மொழி,சிங்கள மொழி விரிவுரையாளர்களும் ஆசிரியர்களும் கற்பித்தல் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தூர இடத்து மாணவர்கள் தங்கள் பதிவுகளை தொலைபேசி ஊடாகவும் பதிவு செய்யலாம்.

**இல.29, பழம் வீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**
**T.P-0217200157**

(1546)

**இந்து பௌத்த கலாசார பேரவை/**
**Europa Bildungs Forum**
**நிர்வாக இயக்குநர்.**

## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்திலும் கிளிநொச்சி காந்தி நிலையச் சிறுவர் இல்லத்திலும் கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடங்கள் உண்டு.

**1. கணனி ஆசிரியர்கள்:** பட்டதாரிகள், டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள்,

வெப் டிசைனிங் செய்யக்கூடியவர்கள் (Web designers) விண்ணப்பிக்கலாம்.

25 வயதிலிருந்து 30 வயதுக்கு இடையிலிருக்க வேண்டும்.

**2.பராமரிப்பாளர்கள் (ஆண்கள்)**

A/L சித்தியடைந்திருத்தல் வேண்டும். கல்வி கற்பிக்கவும் வேண்டும்.

வயது 30க்கும் 45ற்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

**3.காந்தியக் கல்வியை இந்தியாவிற்குச் சென்று1வருட காலம் கற்கவிரும்பும் ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**

வயது-25 தொடக்கம் 35 வரை

கல்வித்தகைமை: க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் உட்பட குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

காந்தியத் தத்துவத்தில் நம்பிக்கையுடையவராக இருத்தல் வேண்டும்.

ஒரு வருட கால உணவு, தங்குமிட வசதி மற்றும் போக்குவரத்துச் செலவு உட்பட அனைத்தும் எம்மால் வழங்கப்படும்.

இவர்கள் பயிற்சி முடித்து வந்து காந்தி நிலையத்தில் ஆகக் குறைந்தது 5 வருடங்கள் கட்டாய வேலை செய்தல் வேண்டும். இதற்கான உதவுத்தொகை வழங்கப்படும். இதற்கான உடன் படிக்கை ஒன்று செய்தல் வேண்டும். இடையில் விலகுவதானால் பயிற்சிக்கான செலவு அனைத்தும் மீளச் செலுத்துதல் வேண்டும்.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து சேவை புரிய விருப்பம் கொண்ட நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமும் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். (கிழமை நாட்கள் மட்டுமன்றி சனி, ஞாயிறு ஆகிய நாட்களிலும் பணியாற்ற வேண்டும்.)

**ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**

**விண்ணப்பமுடிவுத்திகதி: 27.01.2013**

**தொடர்புகளுக்கு:**

தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லமும் தலைவர் காந்தி நிலையமும்
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.
தொலைபேசி இலக்கம்: 077-0604950, 021-4923118

இவ்வண்ணம்

தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்

(கி-2186)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மொரட்டுவ பல்கலைக்கழகத்தின்

# பொறியியல் பீடத்தை திறப்பதற்கு உடனடி நடவடிக்கை- எஸ்.பி

மூடப்பட்டுள்ள மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தினை மீண்டும் திறந்து கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ். பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்றை நேற்று முன்தினம் உயர் கல்வி அமைச்சர் ஒழுங்கு செய்திருந்தார்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் மற்றும் தேசிய டிப்ளோமா பாடநெறி மாணவர்களுக்கு இடையே கடந்த 16 ஆம் திகதி இரவு இடம்பெற்ற மோதலை அடுத்து பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளதாக நிர்வாக ம் அறிவித்தது.

இந்த மோதலின் போது மூன்று மாணவர்கள் காயமடைந்தனர். இவர்களில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

# சமூக விஞ்ஞான போட்டியில் தேசிய ரீதியில் முதன்மை பெற்றவர்கள்


வ.நிதர்சனா


ந.சானுகா


வ.மதுகீர்த்தனா

(கிளிநொச்சி)

கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலய மாணவிகள் மூவர் கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய மட்ட சமூக விஞ்ஞான போட்டியில் முதலாம், ஐந்தாம், ஆறாம் நிலைகளைப் பெற்றுள்ளனர் என வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். இப்போட்டியில் வ.நிதர்சனா (தரம் 10) முதலாமிடத்தையும் ந.சானுகா (தரம் 10) ஐந்தாமிடத்தையும் வ.மதுகீர்த்தனா (தரம் 11) ஆறாமிடத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

# சரத் பொன்சேகாவின் பெயர் மீண்டும் மஹாவம்சத்தில்

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பெயர் மஹா வம்சத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வரலாற்று நூலாகக் கருதப்படும் மஹாவம்சத்தின் ஆறாம் பதிப்பில் சரத் பொன்சேகாவின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் இடம்பெற்ற வரலாற்று நிகழ்வுகள் இந்த ஆறாம் பதிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னைய பதிப்பில் சரத் பொன்சேகாவின் பெயர் உள்ளடக்கப்படவில்லை.

இதற்கமைய முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜயவர்த்தன, ரணசிங்க பிரேமதாச, டி.பி.விஜேதுங்க மற்றும் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் இவ்வாறு உள்ளடக்கப்பட்டுள்ளதாக மஹாவம்ச நூல் பதிப்புக் குழுவின் பொறுப்பாளர் சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

125 எழுத்தாளர்கள் இந்த நூலை எழுதுவதற்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாக் குறிப்பிட்டுள்ளார். இந்த நூலின் உள்ளடக்கங்கள் பாளி மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (செ-2)

# ஆழ்கடல் மீன்பிடியை வடக்கில் அபிவிருத்தி செய்து தாருங்கள்

## வடமாகாண கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மீனவர்களுக்கு தற்போது அவசியமாக காணப்படுவது ஆழ்கடல் மீன்பிடியை அபிவிருத்தி செய்யக்கூடிய ஆழ்கடல் துறைமுகமே! என வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்தார்.

எமது மீனவர்கள் தற்போது ஒருநாள் மீன்பிடியிலேயே ஈடுபட்டு வருகின்றனர். காலையில் கடலுக்கு சென்று மாலையில் அல்லது மறுநாட்காலை கரைக்கு திரும்புகின்றனர். இம் மீன்படி முறைமையினால் கடலின் ஆழ் கடல் அற்ற கடற்பிரதேசங்களிலேயே மீன் பிடிக்க முடிகின்றது.

இதன்போது கிடைக்கும் வருமானமும் குறைவு. ஆனால், ஆழ்கடல் மீன்பிடி முறைமையின் மூலம் பெருமளவு வருமானத்தினை ஈட்ட முடிவதோடு கடல் வளத்தினையும் பாதுகாக்க முடிகின்றது.

இவ் ஆழ்கடல் மீன்பிடி முறைமையினை அபிவிருத்தி செய்வதற்கு முதற்கட்டமாக ஆழ்கடல் துறைமுகங்கள் அவசியமானதாகும். அண்மையில் யாழ்.வந்திருந்த பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரின் றொபின் மன்னார் மற்றும் குருநகர் பகுதிகளில் மீன்பிடித்துறைமுகம் அமைத்து தருவதாக கூறியிருந்தார்.

அவரிடம் நாம் தெளிவாக கலந்துரையாடியிருந்தோம். மேற்குறித்த இரு கடற்பரப்புகளும் ஆழம் அற்றவை எனவும் இத் துறைமுகங்களினூடாக ஆழ்கடலுக்கு செல்ல வேண்டுமாயின் கடலில் நீண்ட நேரம் செலவளிக்க வேண்டி ஏற்படும். இதனால் ஆழ்கடலுக்கு விரைவில் செல்லக்கூடிய இடங்களில் இத் துறை முகங்களினை அமைத்து தருமாறு கூறியிருந்தோம் என்றார் அவர். (செ-4)



அளவெட்டி– மல்லாகம் பலநோக்குக்கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்களில் அதிகூடிய விற்பனையை செய்து முன்னிலை வகித்த முகாமையாளர், விற்பனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட விற்பனையாளர்கள், முகாமையாளர்கள் விருந்தினர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# திறந்தவெளி சிறைச்சாலைக்கு தமிழ் கைதிகள் மாற்றம்

## சிறைச்சாலை ஆணையாளர் நடவடிக்கை

(கொழும்பு)

பயங்கரவாதம் மற்றும் அவசரகாலத் தடைச் சட்டங்களின் கீழ் குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை கண்டியில் உள்ள பல்லேகல திறந்தவெளிச் சிறைச்சாலைக்கு மாற்றி புனர்வாழ்வு மற்றும் தொழில் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக சிறைச்சாலைத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜெனரல் பி.டபிள்யூ. கொடிப்பிலி உறுதியளித்துள்ளதாக கைதிகளின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

பயங்கரவாதம் மற்றும் அவசரகாலத் தடைச் சட்டங்களின் கீழ் குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் கைதிகள் உடல், உள தாக்கங்களுக்கு உட்படுவதாகச் சுட்டிக்காட்டி இவர்களுக்கு ஏற்ற பாதுகாப்புக்களை வழங்குமாறு உறவினர்கள் கோரியிருந்தனர்.

இக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினை கடந்த வாரம் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திடம் உறவினர்கள் சமர்ப்பித்திருந்தனர்.

இவ்விடயத்தினை கருத்தில் எடுத்த சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தீர்ப்பு வழங்கப்பட்ட பின் நாடளாவிய ரீதியில் பல்வேறு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை கண்டி பல்லேகல திறந்தவெளி சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக உறுதியளித்துள்ளார். (செ-2)

# ஐந்து கண் மதவை மீள சீராக அமைத்து தாருங்கள்

## கட்டிய பாலத்தால் பயனில்லை- பிரதேச மக்கள்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சண்டிலிப்பாய்- யாழ்ப்பாணம் பிரதான வீதியை ஊடறுத்து செல்லும் வழுக்கையாற்றினை அணை போட்டு இடப்பட்டிருந்த ஐந்து கண் மதகு அணை தற்போது அகற்றப்பட்டுள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தின் ஒரேயொரு ஆறு என அழைக்கப்படும் வழுக்கையாறிற்கு குறித்த ஐந்து கண் மதவின் மூலம் அணையிட்டு நீர் சேமித்து வைக்கப்பட்டு வந்தது. இதன்மூலம் மழை நீரை சேகரித்த விவசாயிகள் மழை அற்ற காலத்தில் விவசாய தேவைகளுக்கு இவ் வழுக்கையாற்று நீரை பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு இவ்விடத்தில் பாலம் அமைக்கப்பட்டு குறித்த ஐந்து கண் மதகு அகற்றப்பட்டுள்ளது. இதனால் மழை நீரை தேக்கி வைக்க முடியாத நிலையில் மழை நீர் விரயமாக கடலுடன் கலப்பதாகவும் தமது விவசாய நடவடிக்கைக்கு மழை நீரை தேக்கி பயன்படுத்த முடியாதுள்ளதாகவும் பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வருட இறுதியில் மழையில்லாமையால் பெரும்போக நெற் செய்கை பாதிப்படைந்ததாகவும் இவ்வாறான இக் கட்டான சூழ்நிலைகளில் தேக்கி வைத்து நீரை பயன்படுத்த தக்கவாறு அவ் ஐந்து கண் மதவை மீண்டும் அமைக்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பாலத்தின் வீதி எவ்வித பயனுமற்ற நிலையில் ஆபத்துக்கள் இடம்பெறக்கூடியதாக இருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, உரிய அதிகாரிகள் விவசாயிகளின் நலனை கருத்திற்கொண்டு இதனை பெற்றுத் தர வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (செ-5-30)

# போதை மருந்து விற்பனை; மருத்துவர் ஒருவர் கைது

போதையை ஏற்படுத்தக்கூடிய தடை செய்யப்பட்ட மருந்துப் பொருளை விற்பனை செய்த வைத்தியர் ஒருவர் நீர்கொழும்பு பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நீர்கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த வைத்தியர் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு இந்த போதை ஏற்படுத்தும் மருந்தினை விற்பனை செய்துள்ளார்.

இச் சம்பவம் குறித்து நீர்கொழும்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதன் பின்னதாக நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸார் 17 ஆயிரத்து 500 ரூபா கொடுத்து குறித்த மருந்தினை வாங்கியுள்ளனர்.

பரிசோதனையின் போது இந்த மருந்து விற்பனைக்கு தடையானது என தெரிய வந்துள்ளது. இந்நிலையில் வைத்தியர் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஆர்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்.
-திருநாவுக்கரசு நாயனார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கோட்டைப் பகுதியில் இருந்த 40 கடைகள் இடித்து அகற்றப்பட்டன

(கொழும்பு)

கொழும்பு கோட்டை பிரிஸ்டல் வீதியிலுள்ள 40ற்கும் அதிகமான கடைத் தொகுதிகள் நேற்று முன்தினம் மதியம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இடித்து அகற்றப்பட்டன. இது குறித்த அறிவித்தல் கடை நிர்வாகிகளுக்கு ஒருமாதகாலத்திற்கு முன்னர் வழங்கப்பட்டதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது நூற்றுக்கணக்கான பொலிஸ் உத்தியோகத்தர்களும் இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இவர்கள் குறித்த கடைநிர்வாகிகளுக்கு நேற்று முன்தினமே அறிவித்தல் விடுத்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் கடைநிர்வாகிகளும் ஊழியர்களும் கடையிலிருந்த குளிர்சாதனப்பெட்டி, போட்டோக்கொப்பி இயந்திரம் போன்ற மின்சாரப் பொருட்களையும் தமது கடைகளிலிருந்த ஏனைய பொருட்களையும் அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

இச்சம்பவம் குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவிக்கையில்,

கொழும்பு கோட்டை பிரிஸ்டல் வீதியில் அமைந்துள்ள கடைத்தொகுதி சட்டவிரோதமான கடைத்தொகுதிகள் எனவும், இந்தக் கடைத்தொகுதிகளை அங்கிருந்து அகற்றுவதற்கான எழுத்துமூல அறிவித்தல் அவர்களுக்கு வழங்கப்பட்டதா என்பது குறித்து தனக்குத் தெரியாதெனவும் தெரிவித்தார்.

இச்சம்பவத்தின் போது கடையுடைப்பை படம்பிடிக்கச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு தடைவிதித்த இராணுவத்தினர் ஊடகவியலாளர்களின் கடும் எதிர்ப்பை அடுத்து ஊடகவியலாளர்களுக்குப் படம் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# முன்னாள் நீதியரசர் ஷிராணிக்கு ஆதரவான நீதித்துறை பணியாளர்களுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்குச் சார்பாகச் செயற்பட்ட நீதித்துறையைச் சார்ந்தோர் மற்றும் உயர்நீதிமன்ற அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரும் கூண்டோடு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். இந்த இடமாற்றம் விரைவில் இடம்பெறவுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இதன் முதற்கட்டமாக முன்னாள் பிரதம நீதியரசருக்கு நெருக்கமாக இருந்தவர்களை அடையாளம் கண்டு அவர்களை உடனடியாக இடமாற்றம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நீதிச்சேவை ஆணைக்குழுவின் உயர்மட்ட அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்தவர்களும் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்படவுள்ளனர்.

ஷிராணி பண்டாரநாயக்க பிரதம நீதியரசராகவிருந்த இறுதிக்காலத்தில் அவரால் இடமாற்றம் செய்யப்பட்ட 21 நீதிபதிகளின் இடமாற்ற உத்தரவினை மொஹான் பீரிஸ் புதிய பிரதம நீதியரசராகப் பதவியேற்றவுடன் இரத்துச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இரு துறைசார் நிபுணர்கள் கூறிய எங்கள் நோயும் அதற்கான மருந்தும்

தமிழர்களின் கலாசாரம் சீரழிகின்றது என, ஓய்வு பெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் நிகழ்வொன்றில் உரையாற்றும் போது குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களின் கலாசாரம் சீரழிகிறது என ஓய்வு பெற்ற நீதியரசர் [illegible] கூறியிருப்பதை எவரும் சாதாரணமான விடயமாகக் கருதிவிடக் கூடாது.

நாங்கள் தமிழர்கள் என்று பெருமைப்பட்டுக் கொள்வதற்கு அடிப்படையாக இருப்பது எங்கள் கலாசாரம் என்பதை எவரும் மறந்துவிடமுடியாது.

எனவே தமிழினத்தின் அடையாளமாக இருக்கக் கூடிய கலாசாரத்தை அழிய விடுவோமாக இருந்தால் அது தமிழினத்தின் அழிவாக இருக்கும் என்பதே நீதியரசரின் தீர்ப்பு.

ஆக, எங்கள் இனத்தில் தற்போதுள்ள நோய் என்ன? என்பதை ஓய்வுபெற்ற நீதியரசர் மிகவும் ஆணித் தரமாக கூறியிருப்பதை ஏற்றுக் கொள்ளும் போது, நோய்க்கான மருந்துபற்றி சிந்திப்பதும் அதனைத் தேடிக்கொள்வதும் மிகவும் அவசியமானதாகின்றது.

நோயை இனங்காண்பது எத்துணை முக்கியமானதோ அதனைவிடப் பன்மடங்கு முக்கியமானது நோய்க்கான மருந்து.

எங்கள் கலாசாரம் சீரழிகிறது என, நாம் கூறிக் கொள்வதால் அது கட்டுப்பட்டு விடப்போவதில்லை. எனவே அதனைத் தடுப்பதற்கு ஏற்ற திட்டங்களை வகுப்பது அவசியமானதாகும்.

எங்கள் கலாசாரம் சீரழிகிறது என ஓய்வு பெற்ற நீதியரசர் கூறுவதற்கு சில காலங்களுக்குமுன்,

யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலையின் வைத்திய நிபுணர் பேரானந்தராஜா அவர்கள் ஒரு சந்திப்பின்போது,

எங்கள் பிள்ளைகளை ஆத்மீகத்தால் மட்டுமே ஒழுங்கு படுத்த முடியும். ஆத்ம பலம் – ஆத்ம சக்தி எங்கள் இளம் பிள்ளைகளிடம் ஏற்பட்டு விட்டால் எங்கள் பண்பாடு எங்கள் கலாசாரம் என்று எதற்குமே நாம் ஏக்கம் கொள்ளத் தேவையில்லை.

ஆத்மீகத்தை பாடசாலைகளிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு மாணவனிடமும் ஆத்மீகத்தை ஏற்படுத்துவதுதான் ஒரேவழியென்று குறிப்பிட்டார்.

ஆம், ஆத்மீக தானம் என்பது இன்று எமக்கு அவசர தேவையாகவுள்ளது. இளைஞர்களின் பிறழ்வான போக்குகளுக்கு இறைநம்பிக்கை பற்றிய நினைப்பு அறவே இல்லாமையே மூல காரணம் எனலாம்.

ஒரு இளைஞனை மேற்பார்வைசெய்வதென்பது முடியாத காரியம். ஆனால் ஒரு இளைஞனிடம் இறை நம்பிக்கையையும் பாவம் புண்ணியம் என்ற மன உணர்வையும் ஏற்படுத்திவிட்டால் அது போதும் அவன் தன்னை மனிதனாக வளப்படுத்திக் கொள்வதற்கு.

எனவே, வைத்திய நிபுணர் பேரானந்தராஜா அவர்களின் கருத்தை அனைத்துப் பாடசாலைகளும் சிரமேற்கொண்டு செயற்படுத்துமாயின் எங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமையும் என்பது திண்ணம்.

எங்கள் மண்ணில் வாழ்கின்ற ஓய்வுபெற்ற நீதியரசரும் வைத்திய நிபுணரும் எங்கள் தொடர்பில் கூறிய கருத்துக்களை கல்விச்சமூகம் கரிசனையோடு நோக்க வேண்டும்.

# முற்பதிவு செய்யப்பட்ட மண்டபத்தில் கூட்டம் நடத்த இறுதி நேரத்தில் தடை

## சோசலிச சமத்துவக் கட்சி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

சோஷலிச சமத்துவக் கட்சியினரால் வீரசிங்கம் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக்கூட்டம் நேற்றையதினம் நடைபெறவிருக்கும் போது இறுதி நேரத்தில் மண்டபத்தின் நிர்வாகத்தினரால் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் நேற்றையதினம் அக்கட்சியின் பொதுக்கூட்டம் மழையின் மத்தியிலும் மண்டபத்திற்கு வெளியே நடைபெற்றது.

இது தொடர்பில் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் பி.ரி.சம்பந்தன் தெரிவிக்கையில்,

நாம் எமது கட்சியின் பொதுக்கூட்டத்தினை நடத்துவதற்கு வீரசிங்கம் மண்டபத்தின் நிர்வாகத்தினிடம் 5 தினங்களுக்கு முன்னரே மண்டபத்திற்கான முற்பதிவினை செய்ததோடு அதற்கான ரசீதும் எமக்கு வழங்கப்பட்டது. எனினும் நேற்றையதினம் 3 மணிக்கு நாம் மண்டபத்திற்கு வருகை தந்த போது இராணுவத்தின் உத்தரவு எனக்கூறி எங்களுக்கு மண்டபத்திற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

இதனையடுத்து நாம் கொழும்பிலுள்ள எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டோம்.

அவர்கள் பாதுகாப்பு அமைச்சினூடாக யாழ். படைத்தலைமையகத்திற்கு தொடர்பினை ஏற்படுத்திய போது தாம் மண்டபத்திற்கு தடையாக இருக்க வில்லை எனக் கூறினர்.

இராணுவத்தின் இக்கருத்தை நாம் நிர்வாகத்திற்கு கூறியபோது அதனை அவர்கள் ஏற்க மறுத்து மண்டபத்தினை பூட்டிவிட்டுதிறப்பினை எடுத்துச்சென்றுவிட்டனர்.

இதனால் எமது கூட்டம் வெளியே தான் நடைபெற்றது என்றார் அவர்.

மேலும் ஜனநாயக நாட்டில் ஒரு கூட்டத்தினை கூட நடத்துவதற்கு உரிமை இல்லை என்றால் இங்கு யாருடைய ஆட்சி நடைபெறுகிறது என்பதனை அனைவரும் சொல்லிப்புரிய வேண்டியதில்லை எனவும் அவர் கூறினார். (எ-4)

### குற்றப்பிரேரணையை எதிர்த்தமையால்

# அமைச்சர் டியூ குணசேகரவுக்கு இந்திய அரசியல்வாதிகள் பாராட்டு

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவியில் இருந்து நீக்குவதற்கான குற்றப்பிரேரணைக்கு எதிராக இலங்கை பாராளுமன்றத்தில் உரையாற்றிய சிரேஷ்ட அமைச்சர் டியூ. குணசேகரவுக்கு இந்தியாவில் இருந்து பாராட்டுக்கள் குவிந்துள்ளதாக கொழும்பு ஊடகம்ஒன்றுதகவல்வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது இலங்கை பாராளுமன்றத்தில் உரையாற்றிய சிரேஷ்ட அமைச்சர் டியூ.குணசேகர அதனைக் கடுமையாக எதிர்த்துக் கருத்து வெளியிட்டிருந்தார். அத்துடன் வாக்கெடுப்பிலும் கலந்து கொள்ளப்போவதில்லை என்று அறிவித்திருந்தார்.


இலங்கை அரசின் நகர்வுக்கு எதிராக அவர் உரையாற்றி விட்டு நாடாளுமன்றத்தில் விட்டு வெளியேறிய போது முதலாவது தொலைபேசி அழைப்பு இந்தியாவில்இருந்துவந்தது. அந்தஅழைப்பை எடுத்தவர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் தனிப்பட்ட செயலர். அந்த உரைக்காக அவர் இந்தியப் பிரதமரின் சார்பில் பாராட்டு தெரிவித்திருந்தார்.

அதற்கடுத்து இந்தியாவில் இருந்த மேலும்பெருமளவுதொலைபேசி அழைப்புக்கள் வந்தன. தொலைபேசி மூலம் அவரிற்கு பாராட்டு தெரிவித்தவர்களில் இந்தியாவின் உயர்மட்ட அரசியல் தலைவர்கள் பலரும் அடங்கியிருந்தனர்.

இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின்மூன்று உயர்மட்டத் தலைவர்களும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து விட்டு இரு நாடுகளினதும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு இடையில் உறவுகளை வலுப்படுத்துவதற்கு இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர். (செ-2)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## வாழ்த்து



வாழ்த்து எல்லா மந்திரங்களுக்கும் மேலான திருமந்திரமாகும். ஒருவரை நாம் வாழ்த்தும் போது அந்த உயிருக்கும் நம் உயிருக்கும் ஒரு உயிர்த்தொடர்பு ஏற்பட்டு – சங்கிலித் தொடர்பு ஏற்பட்டு வாழ்த்து அதன் மூலம் பாய்ந்து வேலை செய்யும் ஒருவரை நாம் வாழ்த்தும் தகுதியை பெறுகிறோம். அந்த அளவுக்கு நமது பெருந்தன்மை தானே வளர்ச்சி அடைகிறது. இந்த வாழ்த்து பேரறிவில் பதிவாகி அதன் மூலம் அடி மனதிற்கும் பரவி நாளாக நாளாக நட்புணர்ச்சி வளர உதவும். வெறுப்புணர்ச்சி தானே மறைந்துவிடும்.

ஒற்றுமை இன்றி பிணங்கி நிற்கும் ஒரு மகனைத் தந்தை தினசரி வாழ்த்திக் கொண்டே இருப்பாரானால் இருவருக்கும் இடையே உள்ள உயிர்த் தொடர் மூலம் அவ்வாழ்த்து பரவி மகனுடைய மூளையில் பதிந்து அவனை சிறுகச் சிறுகச் திருத்தி தகப்பன் விருப்பப்படி நடக்கும் படி செய்துவிடும். கணவன்– மனைவியிடையேயும் இப்படித்தான். இது நான் அனுபவமாகப் பல குடும்பங்களில் கண்ட உண்மையாகும்.

வாழ்த்தின் மூலம் தேவையான எல்லா நன்மைகளும் கிட்டும். ஆதலால் தான் கடவுளைக்கூட வாழ்த்தும் பக்தர்களையும் பக்திப் பாடல்களையும் நாம் பார்க்கிறோம். கடவுளை வாழ்த்துவதன்மூலம் எல்லோரையும் வாழ்த்தும் நற்பழக்கத்தை மனிதன் ஏற்படுத்திக் கொண்டான். இதனால் மனவளம் பெருகுவது நிச்சயம்.

**அருட்பேராற்றல் கருணையினால்**
**உடல்நலம், நீளாயுள், நிறை செல்வம்,**
**உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்க**
**வளமுடன்** என்று வாழ்த்தி பயன்பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி வானிலேயே சிறுமி கற்பழிப்பு

## மும்பையில் கொடூரம்

.முன்பள்ளியிலிருந்து வீட்டுக்கு செல்லும் போது வானிலேயே 4 வயது பாலகி பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மும்பையிலுள்ள பாடசாலையில் கடந்த 15 ஆம் திகதி மதியம் முன்பள்ளி வகுப்புக்கள் முடிந்ததும் 12 சிறுமிகளை ஏற்றிக் கொண்டு ஒரு வான் புறப்பட்டது.

அந்தேர எனுமிடத்தில் ஒவ்வொரு மாணவியாக இறக்கிவிடப்பட்ட பின்பு கடைசியாக 4 வயது பாலகி மட்டும் தனியாக இருந்தாள்.

பாடசாலை வானில் 35 வயதுடைய சாரதியாக ஒருவர் செயற்பட்டார். அவர் தனியாக இருந்த மாணவியை மிரட்டி வானின் கடைசி இருக்கைக்கு இழுத்து சென்று பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியுள்ளார்.

பின் அவர் அந்த மாணவியிடம் இதுபற்றி யாரிடமும் சொல்லக் கூடாது என்று மிரட்டி வீட்டில் இறக்கிவிட்டார். பயந்துபோன பாலகி இதுபற்றி அன்று வீட்டில் யாரிடமும் கூறவில்லை.

மறுநாள் முன்பள்ளிக்கு பயந்தபடி குறித்த பாலகி வந்ததைக் கண்டு ஆசிரியை விசாரித்தபோது தான் சாரதியின் காமவெறிச் செயல் தெரிய வந்தது.

இதையடுத்து அந்த பாலகியின் தந்தை பொலிஸில் புகார் செய்தார். அதனையடுத்து பொலிஸார் சாரதியைக் கைது செய்தனர்.

அத்துடன் பாடசாலை வான் உரிமையாளருக்கு வழங்கப்பட்ட அனுமதியை பொலிஸார் இரத்து செய்தனர்.

மேலும் குறித்த வாகனங்களில் மாணவிக்கு உதவியாக பெண் உதவியாளர் யாரும் வரவில்லை என்பதால் அது குறித்தும் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (செ-2)

# மத்திய அரசைக் கண்டித்து அ.தி.மு.க. விரைவில் ஆர்ப்பாட்டம்

## ஜெயலலிதா அறிவிப்பு

விலைவாசி உயர்வு உட்பட பல்வேறு முக்கிய விடயங்களில் ஏழைகளை வாட்டி வதைக்கும் மத்திய அரசைக் கண்டித்து எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டத்தை அ.தி.மு.க. நடத்தவுள்ளது.

இதற்கான அறிவிப்பை கட்சியின் பொதுச் செயலாளரும் தமிழக முதல்வருமான ஜெயலலிதா அறிவித்துள்ளார். இது குறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடாத சூழலில் அதனை தி.மு.க. வேடிக்கை பார்த்து வந்த நிலையில் இந்த பிரச்சினை தொடர்பாக பல முறை கடிதங்கள் வாயிலாகவும் நேரிலும் பிரதமரை வலியுறுத்தியும் எந்த நடவடிக்கையும் இல்லை.

இந்தப் பிரச்சினையில் தமிழகத்தின் கோரிக்கையை மத்திய அரசு உதாசீனம் செய்து விட்ட நிலையில் எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் தனது முடிவை அறிவிக்க வேண்டுமென மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடக் கூடாது என மத்திய அரசை தி.மு.க. கேட்டுக் கொண்டுள்ளதாக தமிழக மக்கள் கருதுகின்றனர்.



தமிழகத்துக்குத் தேவையான மண்ணெண்ணெய் அளிப்பது, கேபிள் ரீவிக்கு டிஜிட்டல் உரிமம் வழங்க மறுப்பது, பெற்றோல்-டீசல் விலை உயர்வு, காஸ் சிலிண்டர் விலை உயர்வு என மக்களை வாட்டி வதைக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருகிறது.

தமிழகத்தின் உரிமைகளைப் பறிக்கின்ற தமிழகத்தின் நியாயமான கோரிக்கைகளுக்கு முட்டுக் கட்டை போடும் தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசுக்கும் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கும் எனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்

பல்வேறு முக்கிய பிரச்சினைகளில் ஏழைகளை வாட்டி வதைக்கும் மத்திய அரசைக் கண்டித்தும் தமிழகத்தின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித் தர வலியுறுத்தியும் அ.தி.மு.க. அண்ணா தொழிற் சங்கப் பேரவை சார்பில் தமிழகம் முழுவதும் எதிர்வரும் 24ஆம் திகதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

அரசு ரீதியான மாவட்டத் தலைநகரங்களில் உள்ள மத்திய அரசு அலுவலகங்கள் முன்பு இந்த கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என கூறியுள்ளார். (செ-11)

# ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக தமிழக கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

## அப்போதுதான் மத்திய அரசு பணியும் - ராமதாஸ்

**இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை குறித்து மனித உரிமை ஆணையத்தில் தீர்மானம் நிறைவேற்ற வலியுறுத்தப்பட வேண்டும். இந்த விவகாரத்தில் மத்திய அரசை ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக செயற்பட வைக்க தமிழக கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்று பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.**



இது குறித்து அவர் நேற்றைய தினம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கையில் போர் முடிந்து 4 ஆண்டுகள் நிறைவடையவிருக்கும் நிலையில் ஒரு இலட்சத்துக்கும் மேலான தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு இன்றுவரை நீதி வழங்கப்படவில்லை. இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற உலக நாடுகளின் கோரிக்கைகளை இலங்கை அரசு தட்டிக் கழித்து வருகிறது.

கடந்த ஆண்டு ஜெனிவா நகரில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக அந்நாட்டு அரசே விசாரணை நடத்தி தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரும் தீர்மானம் கொண்டு வரப்பட்டு இந்தியா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் அதன்பின் ஓராண்டாகி விட்ட நிலையில் இலங்கையின் மனித உரிமைச் சூழலில் எந்த ஒரு முன்னேற்றமும் தென்படவில்லை. ஐ.நா மனித உரிமை ஆணையக் குழு இலங்கை சென்றபோது அதன் விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்த ராஜபக்ஷ அரசு மனித உரிமை ஆணையத் தலைவர் நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணத்திற்கு தேவையான ஏற்பாடுகளை செய்து தர மறுத்து வருகிறது.

அதுமட்டுமன்றி போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களை தண்டிக்கவும் மனித உரிமைகளை பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டிய இலங்கை அரசு அதை செய்யாமல் மனித உரிமைகளுக்கு எதிரான செயல்களிலும் தமிழர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைதியான முறையில் சுடரேற்றிய தமிழ் மாணவர்களை கைது செய்தமை, மனித உரிமை ஆர்வலர்கள், பத்திரிகையாளர்களை அச்சுறுத்தியமை, தமிழ் பெண்களை கட்டாயப்படுத்தி இராணுவத்தில் சேர்த்து அடிமைகளைப் போல நடத்தியமை, தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் 10 மக்களுக்கு ஒரு இராணுவ வீரர் என்ற விகிதத்தில் படையினரை நிறுத்தி தமிழர்களின் சுதந்திரத்தைப் பறித்தல், தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அதிகாரத்தைப் பறிக்கும் சட்டத்திற்கு அனுமதி மறுத்ததற்காக இலங்கை உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியை பதவி நீக்கம் செய்தது, தமிழர்கள் வாழும் பகுதிகளை சிங்கள மயமாக்குவது என இலங்கை அரசு தொடர்ந்து அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகிறது.

இலங்கை அரசின் இந்த போக்கை ஐ.நா மனித உரிமை ஆணையத் தலைவர் நவநீதம்பிள்ளையும் மற்ற உலகத் தலைவர்களும் கடுமையாக கண்டித்திருக்கின்றனர். ஆனால், இந்திய அரசு இதை இன்று வரை கண்டிக்காதது மிகுந்த வேதனை அளிக்கிறது.

இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்களுக்காக அந்நாட்டின் மீது நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பு தற்போது கிடைத்திருக்கிறது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி முதல் மார்ச் 23 ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா மனித உரிமை ஆணையத்தின் 22 ஆவது கூட்டத்தில் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் இந்த குற்றச்சாட்டுக்கள் மீது கடந்த ஓராண்டு காலத்தில் இலங்கை அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்படவிருக்கிறது.

அப்போது போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து இலங்கை அரசு முறையான விசாரணை நடத்தாததால் இது குறித்து சர்வதேச விசாரணைக்கு ஆணையிடக் கோரும் தீர்மானத்தை இந்தியா கொண்டு வரவேண்டும். இதற்காக மத்திய அரசை தமிழகத்தில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும். கடந்த ஆண்டு மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஆதரிக்க மத்திய அரசு தயங்கியது. அப்போது தமிழக அரசியல் கட்சிகள் கொடுத்த நெருக்கடியால்தான் வேறுவழியின்றி தீர்மானத்தை ஆதரிக்க ஒப்புக்கொண்டது.

அதேபோல் இப்போதும் மத்திய அரசை ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக செயற்பட வைக்க தமிழக கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்று கேட்டுள்ளார். (செ-2)




# இந்திய-பாகிஸ்தான் பதற்றத்தை மத்திய அரசு தணிக்க வேண்டும்

## கோருகிறார் கருணாநிதி

(சென்னை)

இந்திய-பாகிஸ்தான் எல்லையில் பதற்றம் ஏற்படாமல் இருக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இந்திய வீரரின் தலையை துண்டித்து பாகிஸ்தான் எடுத்துச் சென்றுள்ளது அனைத்துத் தரப்பினரையும் கொதிப்படையச் செய்துள்ளது. பிரதமர் மன்மோகன், காங்கிரஸ் தலைவர் சோனியா ஆகியோர் பாகிஸ்தானுடன் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என கூறியுள்ளனர். எல்லையில் இது போன்ற சம்பவங்கள் இனிமேல் நடக்காமல் இருக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமென நம்பியுள்ளேன்.

என்ன செய்யப் போகிறது?

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் போர்க்குற்றங்களை நியாயப்படுத்தி ஐ.நா சபையில் ஆதரவு திரட்டியவரை இலங்கை நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமித்துள்ளனர். இலங்கை ஜனாதிபதியின் சர்வாதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் முயற்சியாக இந்த நியமனம் நடந்துள்ளது என கருணாநிதி கூறியுள்ளார். (செ-2)



காங்கிரஸ் கட்சி துணை தலைவராக நியமிக்கப்பட்ட ராகுல் காந்திக்கு பிரதமர் மன்மோகன்சிங் மலர்ச்செண்டு வழங்கி வாழ்த்து தெரிவித்ததைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி -இலங்கை போட்டி ரத்து



அவுஸ்திரேலிய- இலங்கை அணிக்கு இடையிலான சிட்னி ஒருநாள் போட்டி மழை காரணமாக இடையில் கைவிடப்பட்டது.

இதனால் கட்டாய வெற்றியை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இலங்கை அணி 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று போட்டியின் முடிவில் இலங்கை 2:1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் 4-வது ஒருநாள் போட்டி நேற்று சிட்னியில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

இதன்படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய ஹியூஸ் ஒரு ஓட்டமும், அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 20 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த டேவிட் ஹசி ஒரு ஓட்டமும், பெய்லி 22 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

ஒருமுனையில் விக்கெட்டுக்கள் சரிந்தாலும் மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வோர்னர் அரைச்சதம் கடந்து 60 ஓட்டங்களும், மத்யூ வேட் 31 ஓட்டங்களும் எடுத்தனர். கடைசி நேரத்தில் அதிரடி ஆட்டத்தை கையாண்ட மிட்சல் ஸ்ரார்க் அரைச்சதம் கடந்தார்.

அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 222 ஓட்டங்களை எடுத்தது.

மிற்சல் ஸ்ரார்க 52 ஓட்டங்களுடனும், சேவியர் டோர்டி 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் சிறப்பான பெறுதியை வெளிப்படுத்திய குலசேகர 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன், அவருக்கு இணையாக பந்துவீசிய மலிங்க 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ரங்கன ஹேரத் 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

எட்டக்கூடிய இலக்கை துரத்திய இலங்கை அணி 3.2 ஓவர்களில் 14 ஓட்டங்களை எடுத்த போது மழை குறுக்கிட்டதால் போட்டி நிறுத்தி வைக்கப்பட்டது.

இதன்போது டில்சான் 9 ஓட்டங்களு டனும், மஹேல ஜெயவர்த்தன 4 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.

எனினும் மழை நீடித்ததால் போட்டி பாதியில் இரத்துச் செய்யப்பட்டது.

நான்கு போட்டிகளின் முடிவில் இலங்கை அணி 2:1 என்று முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளுக்குமிடையிலான 5-வதும் இறுதியுமான ஒருநாள் போட்டி எதிர் வரும் 23-ம் திகதி ஹோபார்டில் நடக்கிறது.

# மேசைப்பந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பிரதேச செயலங்களுக்கிடையில் நடைபெற்ற மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பெண்களுக்கான போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும் ஆண்களுக்கான போட்டியில் நல்லூர் பிரதேசசெயலக அணியும் முதலாமிடங்களைப் பெற்றுக்கொண்டனர்.

விளையாட்டு அமைச்சின் மாவட்ட செயலக விளையாட்டுப்பிரிவினால், யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிலையில், இரண்டாமிடங்களை பெண்களுக்கான போட்டியில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியும் ஆண்களுக்கான போட்டியில் யாழ்ப்பாண பிரதேசசெயலக அணியும் பெற்றுக்கொண்டன.

## பூப்பந்தாட்ட போட்டி

யாழ். மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட பெண்களுக்கான பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உடுவில் பிரதேசசெயலக அணி முதலாமிடத்தையும் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

விளையாட்டு அமைச்சின் மாவட்ட செயலகப் பிரிவினால் யாழ். மாவட்ட பிரதேச அணிகளுக்கிடையில் பெண்களுக்கான பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.







வேலணை பிரதேசசெயலக விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் சம்பியன் பட்டம் வென்ற வேலணை மகேஸ்வரி விளையாட்டுக்கழகத்தினையும், பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் சம்பியன் பட்டம் பெற்ற ஐயனார் விளையாட்டுக் கழகத்தையும், வலைப்பந்தில் சம்பியன் பட்டம் வென்ற புங்குடுதீவு நிலாஜோதி விளையாட்டுக்கழகத்தையும் படங்களில் காணலாம்.

# கொக்குவில் கே.சீ.சீ.சீ; கிரிக்கெட் போட்டி முடிபுகள்

(கொக்குவில்)

கொக்குவில் கே.சீ.சீ.சீ விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கட் போட்டியில் நேற்று நடைபெற்ற போட்டி முடிபுகள் வருமாறு:

முதலாவது போட்டியில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கோண்டாவில் மத்தி விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

இதில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் 5 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் சுன்னாகம் வள்ளுவர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து எ.பி.எல் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் சுன்னாகம் விளையாட்டுக்கழகம் 108 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

மூன்றாவது போட்டியில் காமல் போய்ஸ்சை எதிர்த்து நியூ பேம்ஸ் மோதியது.

இதில் காமல் போய்ஸ் 53 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நான்காவது போட்டியில் உடுவில் இந்து விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் உடுவில் இந்து விளையாட்டுகழகம் 62 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஐந்தாவது போட்டியில் அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ராஜா விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆறாவது ஜொலி போய்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மானிப்பாய் இந்தியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதியது. இதில் மானிப்பாய் இந்தியன்ஸ் விளையாட்டுக் கழகம் 5விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஏழாவது போட்டியில் உடுவில் சலஞ்சர் விளையாட்டுக்க ழகத்தை எதிர்த்து ஈகிள் விளையாட்டுக்கழமும் மோதியது.

இதில் ஈகிள் விளையாட்டுக்கழகம் 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# யாழ்.மாவட்ட மரதன் போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டு அமைச்சினால் மாவட்ட செயலகத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களின் விளையாட்டு வீரர்களுக்கிடையில் 12 கிலோமீற்றர் மரதன் ஓட்டப்போட்டி கடந்த சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்னால் ஆரம்பமாகியது.

இப்போட்டியில் பெண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களையும் முறையே சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தை சேர்ந்த வே. மங்கையற்கரசி, ம.தாரணி, நா.சுமதி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

ஆண்கள் பிரிவில் முதலிடத்தை மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவினை சேர்ந்த றஜிகரனும், இரண்டாம் இடத்தினையும் நெடுந்தீவு பிரதேச செயலகத்தை சேர்ந்த சி. ஞானேஸ்வரனும் மூன்றாமிடத்தினை ஊர்காவற்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ச.ஜெயந்தனும் பெற்றுக்கொண்டனர்.

# வேலணை பிரதேச விளையாட்டு முடிபுகள்

வேலணை பிரதேச செயலகத்திற்கான விளையாட்டுவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை வேலணை துறையூர் மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் நயினாதீவு அண்ணா விளையாட்டுக் கழகமும் வேலணை மகேஸ்வரி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இதில் 25:12,9:25,23:25 என்ற செற்கணக்கில் வேலணை மகேஸ்வரி விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்று சம்பியன் பட்டம் வென்றது.

பெண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் வேலணை ஐயனார் விளையாட்டுக் கழகமும் புங்குடுதீவு விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இதில் 25:11, 25:12 என்ற செற்கணக்கில் வேலணை ஐயனார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றது.

வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புங்குடுதீவு நிலா ஜோதி விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது. இதில் 9:15 என்ற ரீதியில் புங்குடுதீவு நிலா ஜோதி விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று சம்பியன் பட்டம் வென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம்களுக்...

நிலையமொன்றிற்கு எதிராக பௌத்த பிக்குகள் மேற்கொண்ட குரோதப் போராட்டத்தை கட்டப்படுத்த சட்டம் ஒழுங்கைச் சார்ந்தோர் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

முஸ்லிம் மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் எதிரான குரோத செயற்பாடுகள் கண்டிக்கப்பட வேண்டியவை

நாட்டின் அனைத்து சமூகத்தினரையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

சில தரப்பினர் நாட்டையும், அரசாங்கத்தையும் அபகீர்த்திக்கு உள்ளாக்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்றனர்.

சர்வதேச அரங்கில் இலங்கையை தனிமைப்படுத்தும் நோக்கில் சிலர் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மதங்களுக்கு இடையில் குரோத உணர்வைத் தூண்டும் நடவடிக்கைகளுக்கு சட்டம் ஒழுங்கை மதிக்கும் நாட்டின் பிரஜைகள் துணைபோகக்கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார். (எ-11)

## அரசாங்கத்...

கல்வித்துறை சிரியா போன்றும், சுகாதாரத்துறை லிபியா போன்றும் தற்போது மாறியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் உவமானப்படுத்தியுள்ளார். (எ-11)

# செஞ்சோலை சிறுவர் இல்லம் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணை மடுப்பகுதியில் செஞ்சோலை சிறுவர் இல்லம் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. கே.பி என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதனின் ஏற்பாட்டில் இந்த சிறுவர் இல்லம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த திறப்பு விழாவில் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் கே.பி உட்பட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளினால் 1993 ம் ஆண்டு செஞ்சோலை சிறுவர் இல்லம் ஆரம்பித்து வைக்கப்பட்டு 2009ம் ஆண்டு வரை விடுதலைப் புலிகளின் ஆளுகையின் கீழ் பராமரிக்கப்பட்டு வந்தது .

யுத்தத்திற்குப் பின்னர் இச் சிறுவர் இல்லத்தில் இருந்த பிள்ளைகள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுவந்த நிலையில் மீண்டும் கிளிநொச்சிப்பகுதியில் இந்த சிறுவர் இல்லம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திறப்பு விழாவில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வருகை தருவதாக ஏற்பாடாகி இருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் வருகை தரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (எ-11)



## மனிதவுரிமை பேரவை...

கொண்டு உரையாற்றிய போது இந்தக் குற்றச்சாட்டை சுமத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கை அரசாங்கம் பல்வேறு கருமங்களை ஆற்ற வேண்டும் என்றும் விசேடமாக சர்வதேச மனித உரிமைச் சட்டங்களும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களும் மீறப்பட்ட விடயம் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடைபெற வேண்டும்எனஐநா.மனிதஉரிமைகள்ஆணைக்குழு அமர்வு தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கில் இராணுவ மயமாக்கல் குறைக்கப்பட்டு மக்கள் தங்களுக்குச் சொந்தமான காணிகளில் குடியேற இராணுவம் இடமளிக்க வேண்டும், காணிகள் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும், காணாமல் போனவர்கள் சம்பந்தமாக உரிய விசாரணைகள் நடைபெற்று அந்தப் பிரச்சினைக்கு முடிபு காணப்பட வேண்டும், சிறையிலே தடுப்புக்காவலில் உள்ளவர்கள் தொடர்பாக விரைவில் முடிபுகள் எடுக்கப்பட வேண்டும் போன்ற விடயங்களை வலியுறுத்தும் அந்தத் தீர்மானத்தில், நாட்டிலே நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படும் வகையில் ஒரு அரசியல் தீர்வுகாணப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் சம்பந்தன் கூறியுள்ளார். (எ-11)

## பொதுநலவாய...

சர்வதேச நாடுகள் கூறுவது போல பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமைக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகைக்கும் தொடர்பில்லை எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் மனித உரிமைகளில் மாற்றம் கொண்டு வரப்பட்டால் மட்டுமே மாநாட்டில் பங்கு கொள்ள முடியும் என ஏற்கெனவே கனடா அறிவித்திருந்த நிலையில், தற்போது ஷிராணி பண்டாரநாயக்கவின் குற்றப்பிரேரணை விடயத்தினால் மேலும் இலங்கைக்கு சிக்கல்கள் அதிகரித்துள்ளன.

இதனால் பொதுநலவாய நாடுகள் மாநாட்டை கனடா புறக்கணிக்க அதிக வாய்ப்புகள் உள்ளதாக கனேடிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களது செயற்பாட்டிற்கு பிரித்தானியாவும் ஆதரவு வழங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## தமிழர்களுக்கும் தமிழ்க் கலா...

இது தொடர்பாக கருணாநிதி எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழ் மொழி, கலாசாரம், மதம் போன்றவற்றை அழிக்க இலங்கை அரசு திட்டமிட்ட முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

தமிழ் கிராமங்களின் பெயர்களை மாற்றி சிங்கள பெயர்களைச் சூட்டுதல், மாவட்ட, நகர, கிராம எல்லைகளை மாற்றியமைத்தல், இந்து கோவில்களை இடித்தல் போன்ற வேலைகளில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ள கருணாநிதி, தமிழர்கள் ஒடுக்கப்படுவதை வெளிப்படுத்தும் பல்வேறு புள்ளி விபரங்களையும் அந்தக் கடிதத்தில் இணைத்துள்ளார்.

அதில், 89 தமிழ் கிராமங்களின பெயர்கள் சிங்கள மொழியில் மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, கிழக்கு மாகாணத்தில் உள்ள திருக்கோவில் என்ற கிராமத்தின் பெயர் ஸ்ரீகோவிலோ என்றும், குடும்பிமலையின் பெயர் தொப்பிகல என்றும் மாற்றப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர்கள் நெருக்கமாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மிகப்பெரிய கலாசாரத்தையும், பழமைவாய்ந்த மதத்தையும் அழிக்கும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளதாக கருணாநிதி தனது கடிதத்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

எனவே, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்ற முறையில் இந்தக் கொடுமைகளை உடனே தடுத்து நிறுத்தும் தார்மீகக் கடமை இந்தியாவுக்கு உள்ளதாகவும், அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கும் படியும், கருணாநிதி கேட்டுக் கொண்டுள்ளார். (எ-11)

## யாழ்.யுவதியின்...

வீட்டிற்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் நேற்றையதினம் காலை வேளையில் விசுவமடு 12-ம் கட்டைச் சந்திக்கு அருகிலுள்ள குறித்த யுவதியின் உறவினருக்கு சொந்தமான வெறுங் காணி யொன்றில் எரிந்த நிலையில் சடலமாகக் காணப் பட்டார்.

நேற்று முன்தினம் பிரஸ்தாப யுவதி அவ் வீதியால் நடமாடியதை கண்டதாகக் சில பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி விசாரணைகளை மேற்கொண்டதுடன் இம் மரணம் தொடர்பாக உடனடியாகவிசாரணைகளை மேற்கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம்கொலையாக இருக் கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.
(எ-5,6,260,263,255)


1ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மலர் 13 10 1937

விண்மலர் 02 02 2012



அமரர் சின்னத்தம்பி சரஸ்வதி
(தசமி திதி)

கடந்த வருடம் இதே திதியில் எம்மை எல்லாம்
ஆழாத் துயரில்ஆழ்த்திவிட்டு எம்மைப் பிரிந்த
எமது தாயாரின் பிரிவைக் கேட்டு ஆறுதல் கூறியோருக்கும்,
இறுதி அஞ்சலி செலுத்தியோருக்கும்,
மேலும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும்
எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
இந்நாளில் எமது தாயாரின் பிரிவால் இன்றும் வாடும்
நாங்கள் அன்னாரின் பாசமிகு வாழ்நாளை
நினைவில் ஏந்தி நிற்கின்றோம்.

"சரஸ்தான்"
2ம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

என்றும் அன்புடன்....
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
யாழ். பிரஞ்சு நட்புறவுக் கழகம்
The Only Official Centre for French Language in Jaffna
பிரஞ்சு மொழியை பிரஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

Alliance Française de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கிகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே.
சர்வதேச தரம் வாய்ந்த Alliance Française de Jaffna இல் France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக்கொள்கிறார்கள்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன.
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
61, Kachcheri-Nallur Road, Jaffna Phone: 021.2228093
E-mail: alliancejaffna@yahoo.com
முக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடம்

மணல் விற்பனைக்குண்டு
கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மனல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
4 டிரக்டர் - 23,000/-
தொடர்புகளுக்கு
தீபன்
0722694462
(C-2192)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.